கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 143 | இதழ் : 22 | திகதி : 25.12.2019 | விலை : 45.00

## துயருறுவோர் மத்தியில் புளிக்காரமாக செயற்படவேண்டியது கத்தோலிக்கரின் கடமை

### திருத்தந்தையின் நத்தார் செய்தி



அரும்பெரும் செயல்களை ஆற்றிவரும் இறைவனின் கருணைநிறை அன்பின் கருவிகளான துன்புறுவோரிடையே அர்ப்பணிப்புடன் நாம் செயலாற்ற வேண்டுமென தமது கிறிஸ்மஸ் செய்தியில் தெரிவித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நாங்கள் வாழும் சமுதாயத்தில் பல்வேறு துன்பங்களை சுமக்கும் மக்களுக்கு மத்தியில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் புளிக்காரமாக செயற்படவேண்டியது அவர்களின் கடமை என வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மீட்பு என்பது அனைவருக்கும் வழங்கப்படும் ஒன்று எனினும் அடக்கி ஒடுக்கப்பட்டோர், பசியால் வாடுவோர், சிறையில் இருப்போர், அநாதைகள், விதவைகள், கைவிடப்பட்டோர் இறைவனின் தனிக்கவனத்திற்கும், பராமரிப்புக்கும் உரியவர்களாக விளங்குவதால் இவர்களுக்கு உதவி செய்வதன் மூலமே கிறிஸ்தவர்கள் தமது இறை விசுவாசத்தை இறைவனில் ஆழப்படுத்த முடியும் எனவும் திருத்தந்தை தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## மனித நேயத்தை மலரச் செய்யவே கிறிஸ்து இயேசு உலகிற்கு வந்தார்

### கிறிஸ்மஸ் செய்தியில் யாழ் ஆயர்



கிறிஸ்து இயேசுவின் பிறப்பு விழாவை உலகெங்கும் வாழும் இறைமக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர். உலக வரலாறே கிறிஸ்துவுக்கு முன் (கி.மு.) மற்றும் கிறிஸ்துவுக்கு பின் (கி.பி.) என்ற வண்ணமே அசைந்து வருகிறது. அத்தகைய முக்கியத்துவம் பெற்ற புனித நிகழ்வாக, மறை நிகழ்வாக மற்றும் எமது விசுவாச வாழ்வின் அத்திவார நிகழ்வாக கிறிஸ்து இயேசுவின் பிறப்பு அமைந்துள்ளது. கிறிஸ்து இயேசு மக்களின் தீமைகளையும், பாவங்களையும் வேரோடு களைந்து மனுக்குலத்திற்கு மீட்பளிக்கவே உலகிற்கு வந்தார். "உன்னதங்களில் இறைவனுக்கு மகிமையும் பூவுலகில் நன்மனத்தோருக்கு அமைதியும் உண்டாகுக" என கிறிஸ்து பிறப்பின் போது ஒலித்த வானதூதரின் வாழ்த்திசை உலகில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தவே கிறிஸ்து இயேசு பிறந்தார் என்பதை மெய்ப்பிக்கின்றது.

கிறிஸ்து இயேசு மனிதரை கடவுளாக்க இவ்வுலகிற்கு வரவில்லை. மனிதர்கள் மத்தியில் மனித நேயத்தை கட்டியெழுப்பவே அவர் இவ்வுலகிற்கு வந்தார். அதாவது மனிதர்களை மனிதர்களாக்கவே அவர் இவ்வுலகில் பிறந்தார். மனித மாண்பு நிலைகுலைந்து, மனிதநேயம் குழி தோண்டி புதைக்கப்பட்ட அவலகரமான நிலையிலே தான் கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்ந்தது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## யாழ் மறைமாவட்டத்திற்கு நான்கு புதிய திருத்தொண்டர்கள்



யாழ்.மறைமாவட்டத்திற்கு புதிய திருத்தொண்டர்களாக நான்கு அருட்சகோதரர்கள் கடந்த 12.12.2019 அன்று யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் அருட்பொழிவு செய்யப்பட்டனர்.

அருட்சகோதரர்களாகிய அலிஸ்ரன் நியூமன், எட்வின் நரேஸ், யோண் குரூஸ், நிதர்சன் ஆகியோரே திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டவர்களாவர். புதிய திருத்தொண்டர்கள் பணிக்காக பங்குத்தளங்களிற்கு ஆயரால் அனுப்பிவைக்கப்பட்டனர்.




## கரங்கள் நீள்வதற்கும் காவல்மரங்களாய்!

வாழ்வின் வலிகளை
இனி
எண்ணுவதற்கும்
சுமப்பதற்கும்
பழகிக்கொண்டோம்

காயங்களுடன்
படுக்கைக்குச் செல்வதும்
ரணங்களைக் கனவுகளாய்
கொள்வதும்
விடியலை
போர்க்களத் தோரணையில்
சந்திப்பதும்
விதியாகி வீழ்கிறோம்

பூட்டிய வேதனைகளின்
நீட்சி
வீட்டினுள்ளும் நாட்டினுள்ளும்
சிறகுமுளைத்துப்
பறக்கிறோம்

அமைதி அனாதையாகவும்
நீதி
நிராயுதபாணியாகவும்
நிலைநிறுத்தப்பட்ட நாட்டில்
வாழ்கிறோம்

மூட்டைப்பூச்சியென்று
வீடொன்றே
எரியூட்டப்பட்ட
10 ஆண்டுகள் கடந்தும்
ஆறாத தழும்புகள்
விலைபோன
பந்தைய குதிரைச்சவாரி தலைவர்கள்
நீதிக்கு
புதிய இலக்கணம் செய்யும்
உலகமனசாட்சிகள்
நெரித்த குரல்வளைகளில்
குற்றுயிரானோம்

வல்லுறவு கொள்ளவிரும்பும்
ஜனநாயகத் தெரிவுகளில்
சிக்கித்தவித்து
அடையாளம் தொலைக்கிறோம்
எதிர்கால பயங்கள்மீதான
நம்பிக்கையொன்றே
தீர்வாய்
எப்போதும் பரிசளிக்கப்படுகிறோம்

இவ்வாறு
ஜெரிக்கோ வீதியின்
கள்வர்களால்
காயங்களாகிறோம்

எனினும்
அதேவீதியில்
ஆயிரமாயிரம் சமாரியர்களாய்
திரள்வோமா
கட்டுப்போடுவதற்கும்
வீர கரங்கள் நீள்வதற்கும்
காவல்மரங்களாய் !

– அருட்பணி. எஸ். ஏ. அருட்செல்வன்





# துயருறுவோர்க்கு துணை நிற்கவே பாலகன் இயேசு அவதரித்தார்

### குருமுதல்வரின் நத்தார் செய்தி



ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க, உண்மை உடைத் தோருக்கு ஆறுதல் அளிக்க, சிறைப்பட்டோர் விடுதலைபெற, குருடர் பார்வை பெற என் தந்தை என்னை அனுப்பியுள்ளார் என்று இயேசு தான் இவ்வுலகில் பிறந்ததன் நோக்கத்தை தெளிவாக எடுத்துரைத்தார். அப்பணியையே நிறைவேற்றினார்.

எமது மறைமாவட்டத்தில் வருகிற வருடம் நாம் அனுசரிக்க விருக்கின்ற துயருறுவோர் ஆண்டில் எமது செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பதை பாலன் இயேசு மண்ணில் அவதரித்ததன் நோக்கம் எமக்கு உணர்த்தி நிற்கிறது.

# இலங்கை துறவற உயர் தலைவர்கள் பேரவையின் புதிய நிர்வாகக்குழு



இலங்கை துறவற உயர் தலைவர்கள் பேரவையின் புதிய நிர்வாகக்குழுவில் நற்கருணைநாதர் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்பணி. டிலான் பெர்னாண்டோ SSS பேரவையின் தலைவராகவும் . புனித. டோமினிக் கன்னியர்கள் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி சிறிமா ஒப்பநாயக்க OP உப தலைவியாகவும், டிலாசால் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்சகோதரர் கிறிஸ்டி குருஸ் FSC பொருளாளராகவும், திருக்குடும்ப கன்னியர் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி தியோபின் HF, செப மாலைதாசர் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்பணி. பிரான்சிஸ் ஜெயசீலன் CR. திருச்சிலுவைக்கன்னியர் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி றொபினா பவுலின் HC ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

# யாழ் மறைமாவட்டத்தின் புதிய நற்கருணைப் பணியாளர்கள்



யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பங்குகளில் இருந்து பயிற்சி பெற்ற பத்து பொதுநிலை நற்கருணைப் பணியாளர்களை நியமிக்கும் திருப்பலி கடந்த 12.11.2019 அன்று யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக் கப்பட்டது.

திருவாளர்கள் செல்லையா பற்றிக் ஜெயராஜ்(இளவாலை), செபஸ்தி றொபின்சன் (இளவாலை), சிவராஜா கிருபரூபன்(மணியம்தோட்டம்), செபஸ்ரி பீற்றர்(O.L.R. யாழ்.), அவுலின் மரியதாசன் (O.L.R. யாழ்.), பங்கிராஸ் பத்மராசா(O.L.R. யாழ்.), செபஸ்ரியான் அன்ரனி டெனிஸ் (புங்குடுதீவு), பத்திநாதன் வசந் அன்றூஸ்(சக்கோட்டை) திருமதிகள் றணசிங்க மேரி ஜெலோனா(சக்கோட்டை), விக்னேஸ்வரன் ஆரோக்கிய மரி(மிருசுவில்) ஆகியோரே நற்கருணைப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# குருநகர்ப் பங்கில் புதிய குருமனை



யாழ் குருநகர் பங்கில் புதிய பங்குக் குருமனை 08.12.2019 அன்று யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப் பட்டது. இந்நிகழ்வில் யாழ் மறைமாவட் டக் குருமுதல்வர், யாழ் மாநகர சபை முதல்வர் திரு.இ.ஆனோல்ட், குருக்கள், துறவிகள், பங்குமக்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இக்குருமனைக்கான அடிக்கல் சென்ற ஆண்டு நாட்டப்பட்ட நிலையில் பங்குத்தந்தை அருட்பணி.C.ஜஸ்ரின் அடிகளாரின் அயராத உழைப்பினால் மிகச் சிறந்த முறையில் அழகு பெற வடிவமைக்கப்பட்டுள்ளது.

# குருத்துவ வாழ்வில் 56 ஆண்டுகள்



மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் குருத்துவ அபிஷேக நாள் (21.12.2019)

குருத்துவ வாழ்வதனில்
அருள்நிறை இறைபணியில்
ஐம்பத்தாறு வருடங்கள்
அதி உன்னத நிலை அன்றோ
ஆண்டகையே! உந்தனுக்கு
ஆண்டவர் ஆசி வேண்டி
வாழ்த்துரைத்து மகிழ்கின்றோம்
கோதுமை மணியென பலனீந்து
நற்கனிகளென் நலனீந்து
யாழ். திரு அவைக்கு தனையீந்த
திருவருட்செல்வமே வாழ்க! வாழ்க!!

# மல்வம் பங்கின் சகல புனிதர்களின் இராக்கினி பிரசீடிய விழா



உடுவில் மல்வம் பங்கு சகல புனிதர்களின் இராக்கினி பிரசீடியத்தின் ஒன்பதாவது பிரசீடிய விழா பங்குத்தந்தையும் அதன் ஆன்மீக இயக்குநருமான அருட்பணி அன்ரன் புனிதகுமார் அடிகளாரின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நிகழ்வுகள் அதன் தலைவி மாலதி மோகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆர்க் மடம் பாடசாலை அதிபர் அருட்சகோதரி சாந்தினி சாந்தலிங்கம்(தி.கு) பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

### வாசக நெஞ்சங்களை வாழ்த்துகின்றோம்




### பேராலயத்தில் கிறிஸ்து பிறப்பு மற்றும் புது வருடத் திருப்பலிகள்

**கிறிஸ்து பிறப்பு**

| | |
|---|---|
| நள்ளிரவுத் திருப்பலி (ஆயர் தலைமையில்) | : 11.45 |
| முதலாம் திருப்பலி | : காலை 5.30 |
| இரண்டாம் திருப்பலி | : காலை 7.00 |
| நன்றி வழிபாடு 31.12.2019 | : மாலை 5.00 |

**புதுவருடம்**

| | |
|---|---|
| நள்ளிரவுத் திருப்பலி | : 11.45 |
| முதலாம் திருப்பலி | : காலை 5.30 |
| இரண்டாம் திருப்பலி (ஆயர் தலைமையில்) | : காலை 7.00 |


# புனித வளன்

## கத்தோலிக்க அச்சகம்

### டிஜிற்றல் அச்சுத்தரத்தின் முன்னோடிகள்




- புத்தகங்கள்
- நினைவுமலர்கள்
- போஸ்ரர்கள்
- அழைப்பிதழ்கள்
- பற்றுச் சீட்டுக்கள்
- கலண்டர்கள்
- ஸ்ரிக்கர்கள்
- அலுவலக அச்சகத் தேவைகள்
- பைண்டிங் வேலைகள்

தரமான வேலை
துரிதமான சேவை
நியாய விலை

இல.360,பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 021 222 2378

# நெவாட் பௌண்டேஷன் லிமிட்டெட்

## மீன்வலை உருவாக்கல் தொழிற்சாலை



வடக்கு கிழக்கு மக்களின் கடல் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யவும்,மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் உங்கள் தேவைக்கேற்ப வலைகளை உற்பத்தி செய்து வழங்கும் நிறுவனம்.



- ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரத்தில் முன்னணிவகிக்கும் யாணைக் (Yarn) கொண்டு, வாடிக்கையாளரின் தேவைக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவும் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- நன்னீர் மீன் பிடிப்பதற்கான வலைகளையும் உங்கள் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம்.
- 3 இழை - 60 இழை வரையிலான வலைகளை உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உடனடியாக உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- விவசாய தேவைகளுக்கான வலைகளும் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- உங்களுக்கு தேவையான நைலோன் நூல்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (3 இழை – 60 இழை வரை 100 கிராமாக பெற்றுக் கொள்ளலாம்)

எம் அன்பார்ந்த வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எம் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

No.647, Beach Road, Jaffna, Sri Lanka E-mail: nefadfishnets@yahoo.com
Tel: +(94) 21 222 8919 Fax: +(94) 21 222 4781


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360. பிரதான வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2019ம் ஆண்டு மார்கழி மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 2020 கிறிஸ்மஸ் சிறப்பிதழ் 2020

**எமது மறை மாவட்டம் வருகின்ற ஆண்டை துயருறுவோர் ஆண்டாக பிரகடனம் செய்திருக்கின்றது. யார் இந்த துயருறுவோர்? ஏன் இதற்கென ஒரு ஆண்டு? இந்த ஆண்டில் நாம் செய்யக் கூடியவை எவை? போன்ற வினாக்களுக்கு விடை தேடி 2020 ஆம் ஆண்டையும் நாம் அனைவரும் ஒரு பொருள் பொதிந்த ஆண்டாக மாற்றுவதை நோக்காகக் கொண்டதே இந்தக் கட்டுரை.**

# தீர்ப்பு வழங்கும் லாசர்கள்

### யார் இந்த துயருறுவோர்?

திருவிவிலியத்திலே இத்தகையோரைக் குறிப்பிட 'அநாவிம்' (ANAWIM ) என்ற சொல் பயன்படுத்தப் படுகின்றது. இறைவனைத் தவிர வேறு போக்கிடம் அற்றவர்களையே இப்பதம் குறிக்கின்றது. ஏழைகள், கைம் பெண்கள், அநாதைகள், ஊனமுற்றோர், ஒதுக் கப்பட்டோர், நோயாளர்கள், அவமானத்துக்குள்ளானோர் என ஒரு பெருந்தொகையினரை இப்பதம் உள்ள டக்குகின்றது. இவர்கள் அனைவரதும் பொது அடை யாளம் அவர்கள் இவ்வுலகத்தால் கைவிடப்பட்டவர்கள் என்பதாகும். கரும்பு பிளியப்பட்டு சக்கை எறியப்படுவது போல் இவ்வுலகில் சுரண்டப்பட்டு தூக்கி எறியப்பட்ட வர்கள் தான் இந்த **அநாவிம் - துயருறுவோர்.** உலகம் கைவிட்ட இவர்களுக்கு இனி இறைவன் மட்டுமே துணை. " தாழ்நிலை நின்ற தம் அடியாரை அவர் கடைக்கண் நோக்கினார்". அவ்வாறாயின் இன்று எம் மத்தியில் உள்ள துயருறுவோர் யார் என்பதைப் பட்டியலிட்டால்...

- **ஏழையர் :**

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரம் இழந்து நிற்போர் முக்கியமான துயருறுவோர் ஆவார். இவ்வாண்டில் இத்தகையோர் பங்கு ரீதியாக அடை யாளம் காணப்பட்டு அவர்களது வாழ்க்கை மேம்பட செயற்றிட்டங்களை அமைப்பது அவசியம்

**அருட்பணி.ம.வி.இ.இரவிச்சந்திரன்**
முதுநிலை விரிவுரையாளர்
கிறிஸ்தவ நாகரிகத்துறை - யாழ் பல்கலைக்கழகம்

- **கைம்பெண்கள் :**

போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் எம்மத்தியில் அதிகரித்து உள்ளன. துயர் துடைக்கும் திட்டங்கள் அவசியம்.

- **போதைப் பாவனைக்கு அடிமையானோர் :**

போதைக்கு அடிமையாகும் இளையோர் எம் மத்தியில் அதிகரித்து வருகின்றார்கள். போதைப்பொருள் விற்பனையை தடுப்பதற்கோ, பாதிக்கப்பட்டோருக்கு மறு வாழ்வு வழங்குவதற்கோ ஆற்றல் உள்ளவர் களோ, அமைப்புக்களோ எம் மத்தியில் இல்லை. இப்பணியும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

- **வேலைவாய்ப்பு அற்றோர் :**

வேலைக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படா ததால் வாழ்வில் திசைகெட்டுச் செல்லும் இளையோர் பலராக காணப்படுகின்றனர். வேலை வாய்ப்புக்களை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

- **மன அழுத்தத்துக்குள்ளானோர் :**

பல்வேறு பிரச்சினைகளாலும், இழப்புக்காளாலும் மன அழுத்தத்துக்குள்ளானோர் அதிகமாக இருக்கின் றனர். இவர்களது சோகங்களை கேட்டு ஆற்றுப்படுத்த வல்லோர் அவசியமாக தேவைப்படுகின்றனர்.

- **குலையும் குடும்பங்கள் :**

ஒவ்வொரு சமூகத்தில் அடித்தளமாகவும், திரு அவையில் சிறு வடிவமாகவும் காணப்படும் குடும் பங்கள் இன்று மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகி வருகின்றன. குடும்பங்களை மீட்டெடுப்பது சமுதாயத் தையே மீட்டெடுப்பதாகும்.

- **சிறுவர்கள் :**

இன்று எம் சிறுவர்கள் பல பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளனர். பெற்றோரை, உறவுகளை இழந்து பாதிப்புக்குள்ளானவர்களும், கல்வி வாய்ப்பற்று துன்புறு வோரும், தவறான வழிகாட்டுதல்களால் திசைமாறு வோரும் என துன்புறும் இவர்களது வளர்ச்சியில் பங்கெடுக்கவேண்டும்.

- **காணாமல் போனோரின் உறவுகள்**

நீண்ட போரில் தமது உறவுகளைக் கையளித்து அவர்களது கதி என்ன என்பதை அறிய ஆயிரம் நாட்கள் கடந்தும் வீதியோரத்தில் காத்திருக்கும் மக்களும் எமது கரம் நீட்டலை நாடி நிற்கும் துயருறுவோரே.

- **அரசியல் கைதிகள்**

பல்லாண்டுகளாக, உரிய விசாரணைகள் இன்றி சிறைகளிலும், தடுப்புக் காவல்களிலும் வாழும் நம் உறவுகளும் எமது உதவிக்காக காத்திருக் கின்றார்கள்.

- **முகாம்களில் வாடுவோர்**

போர் முடிந்த பத்து தசாப்தத்தின் பின்பும் தமது சொந்த மண்ணுக்குத் திரும்ப முடியாமல் தத்தளித்து முகாம்களில் வாடும் மக்களும், தமது காணிக்காக குரல் கொடுத்து களைத்திருப்போரும் கூட எமது உதவியை நாடும் துயருறுவோரே.




### ஏன் இதற்கென ஒரு ஆண்டு?

கிறிஸ்தவ வாழ்வு என்பது எப்போதும் துயர் துடைக்கும் வாழ்வு. அப்படியிருக்க ஒரு ஆண்டை இதற்கென ஏன் ஒதுக்க வேண்டும் என்ற வினாவை நாம் எழுப்ப வேண்டும். முதலாவதாக எமது மீட்புக்கு அவசியமான பிறரன்புப் பணி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இவ்வாண்டின் நோக்கமாகும். இரண்டாவதாக: எம் மத்தியில் இன்று துயறுருவோரை அடையாளம் காண்பதும் அவர்களுக்கான பணிகளைத் துரிதப் படுத்துவதும் மற்றுமொரு நோக்கமாகும். ஆகவே விழிப்புணர்வு செயற்றிட்டம், நடைமுறை என்ற வகையில் எமது இவ்வாண்டுக்கான செயற்திட்டங்கள் அமைவது அவசியம்.

### இவ்வாண்டில் நாம் செய்யக் கூடியவை எவை?

- பங்கு மட்டத்தில், ஆலய மட்டத்தில் காணப்படும் துயருறுவோரை அடையாளங்கண்டு ஒரு தகவல் திரட்டை உருவாக்குவது அவசியமாகும்.
- .வின்சன் டி போல் சபை இல்லாத பங்குகளில் அதனை ஆரம்பித்து பிறரன்புப் பணியை ஊக்கு வித்தல்.
- இளைஞர் மன்றங்களுக்கு துயருறுவோர் சார்ந்த விடயங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களது பணி வீச்சை அதிகரித்தல்.
- பங்கு எல்லைகளுக்குள்ளும் பங்கிற்கு வெளியேயும் வாழும் பிறமதங்களைச் சேர்ந்த துயருறுவோர் மட்டில் கரிசனை கொள்ளுதல்.
- முதியோர் கௌரவிப்பு, முதியோர் சந்திப்பு ஆகிய விடயங்களை பங்குமட்டத்தில் ஊக்குவித்தல்.
- பங்கிலுள்ள நோயார்களை சந்தித்து ஆறுதல் கூறும் பழக்கத்தை பொதுநிலையினர் மத்தியில் ஏற்படுத்தல்.
- நடமாட முடியாத நோயாளர்கள் இருக்கும் இல்லங் களில் திருப்பலி ஒப்புக்கொடுத்து அவர்களது ஆன்மீக ஆறுதலுக்கு துணை புரிதல்.
- பங்கின் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை துயருறுவோர் நலன் பேணலுக்கென ஒதுக்குதல். பங்கு அருட்பணிப் பேரவை இதனை தீர்மானித்து அமைப்புக்களினூடாக நடைமுறைப்படுத்தல்.
- பங்குதோறும் துயருறுவோர் பராமரிப்புக்கான ஒரு நிதியத்தை உருவாக்குதல்.
- அதிக வருமானமுள்ள பங்குகள் பின்தங்கிய ஒரு பங்கை தமது பராமரிப்புக்கென பொறுப்பேற்று துயர் தீர்க்கும் பணிகளை முன்னெடுத்தல்.
- ஆலய திருவிழாக்களின் பகுதியாக துயருறுவோ ருக்கு ஆதரவு வழங்கும் செயற்பாடு ஒன்றையும் முன் னெடுத்தல்.
- பிறந்த தினம், இறப்பு தினம், திருமணத் தினம் போன்ற நாட்களில் துயருறுவோருக்கு பங்களிப்பு வழங்கும் பழக்கத்தை உருவாக்கல்.
- மறைக்கல்வியின் பகுதியாக சிறுவர்களை துயரு வோர் இல்லங்களுக்கு அழைத்துச் சென்று அவர்கள் மட்டிலான அக்கறையை பேண வழி செய்தல்.

### எம்மால் துயருறுவோரை என்ன செய்வது?

நாமும் நாளாந்த வாழ்வில் எமது எதேச் சாதிகாரப் போக்கினால் மற்றவர்களைத் துன்புறுத்து வோராக இருந்திருக்கலாம். வார்த்தையாலும், செயல்க ளாலும் நாம் மற்றவர்களைத் துன் புறுத்தியிருக்க லாம். கணவர் மனைவி ஒருவர் ஒருவரைத் துன் புறுத்தியிருக்கலாம். பெற்றோர் பிள்ளைகள் மட்டில் கடுமையை வெளிப்படுத்தி அவர்கள் துன்புற காரண மாய் இருந்திருக்கலாம். வேலை செய்யும் இடங்க ளில், எமது அயலில் கடுமையான வார்த்தைகளால் மற்றவர்களுக்கு துயர் வருவிக்கலாம்.

இவ்வாண்டில் எம்மால் துன்புற்றவர்களை கவனத்தில் எடுத்து அவர்களோடு உறவைக் கட்டி யெழுப்புதல் வேண்டும். மன்னிப்பதும், சொல்லிலும் செயலிலும் வன்முறையற்ற போக்கை கடைப்பிடிப்ப தும் அவசியம். வன்முறை நிராகரிப்பு நாள் ஒன்றை பிரகடனம் செய்து அன்பு நெறிக்கான எமது அர்ப் பணத்தை செய்து கொள்ளலாம்.

### நாமே துன்புறுவோராய் இருக்கையில்..

நாமே ஏழைகளாகவும் துன்புறுவோராகவும் இருக்கும் போது நாம் மற்றவர்களுக்கு என்ன செய்வது என்ற வினாவும் எமக்கு வரலாம்.

யூத சமயத்தில் காணப்படும் "தல்முட்" இலக் கியங்களில் ஒரு கதை உண்டு. ராபி ஒருவரிடம் ஒருவர் மெசியா எப்படி இருப்பார்? அவரை எப்படி அடையாளம் காண் பது? என வினா எழுப்புகிறார். அதற்கு ராபி கூறுகிறார் : நகரின் ஓய்விடத்திற்கு செல்லுங்கள் அங்கு பலர் தமது காயங்களின் கட்டுக்களை அவிழ்த்து விட்டு அவற்றுக்கு மருந்திட்டுக் கொண்டிருப்பார்கள். பலர் எல்லாக் கட்டுக்க ளையும் அவிழ்த்து விட்டு ஒவ்வொன்றாக மருந்திடுவார். அவர்கள் மத்தியில் ஒருவர் இருப்பார். அவரது உடலிலும் பல கட்டுக்கள் இருக்கும். ஆயினும் அவர் ஒவ்வொரு கட்டாகத்தான் பிரிந்து மருந்திடுவார். ஏனெனில் ஆபத்தான நிலையில் ஒருவர் அவ்விடம் உதவி கோரி வந்தால் அவருக்கு மருந்திட வேண்டும் என்ற நோக்கமே இதற்கு காரணம் அவரே மெசியா என்றார்.

நாம் எல்லோரும் ஏதோ வழியில் பாதிப்புக்குள்ளான வர்கள்தான். வீட்டுக்கு வீடு வாசல்படி என்பது போல துயரும், இழப்பும் இல்லாத வீடு இருக்க முடியாது. இதுவே உலக நியதி. (தொடர்ச்சி 15ம். பக்கம்)

## இறைவார்த்தை ஞாயிறு - பிரகடனம்




திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்கள் செப்ரெம்பர் 30, 2019 இல்(APERRUIT ILLIS) என்னும் தமது திருத்தூது மடலினை வெளியிட்டுள்ளார். "மறைநூலை புரிந்து கொள்ளுமாறு அவர்களு டைய மனக்கண் களை திறந்தார்." லூக்கா 24:45 என்னும் தலைப் பில் வெளியிடப்பட்ட இவ் அப்போஸ்தலிக்க மடல் வழியாக ஆண்டு தோறும் வழிபாட்டு ஆண்டின் 3ம் ஞாயிறை 'இறைவார்த்தை ஞாயிறு' என நிறுவினார். நீண்ட காலமாக கோரப்பட்ட இறைமக்களின் வேண்டுகோலுக்கு அமைவாகவே திருத்தந்தை அவர்கள் 'இறைவார்த்தை ஞாயிறை' பிரகடனப்படுத்தியுள்ளார்.

இவ் ஞாயிறு அன்று இறைவார்த்தையை கொண்டாடுவதற்கும் அதனை ஆழ்ந்து கற்பதற்கும் அவ் இறைவார்த்தை பகிர்ந்தளிப்பதற்கும் இறைமக்கள் தம்மை ஈடுபடுத்த வேண்டும் என பரிந்துரை செய்கிறார். உயிர்த்த ஆண்டவருக்கும் நம்பிக்கையாளர்களுக்கும் இறைவார்த் தைக்கும் இடையே உள்ள உறவு கிறிஸ்தவர்களின் உண்மையான அடையாளத்தை புரிந்து கொள்ள மிக அவசியமானதாகும். திருவிவிலியத்தின் பெரும் பகுதியினை முதல்முதல் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்த புனித ஜெறோம் அவர்களின் இறப்பின் 1600 ஆண்டுகள் 2020 இல் நிறைவாகின்றன. "இறைவார்த்தையை அறியாதோர் கிறிஸ்துவை அறியாதோர்" என்னும் புனித ஜெறோம் உடைய கூற்று வழியாக இறைவார்த்தையின் முக்கியத்துவத்தை திருத்தந்தை அவர்கள் வலியுறுத்துகின்றார்.

ஆண்டவர் இயேசுவின் இறப்பின் பின்பு மன முடைந்த சீடர்களில் இருவர் எம்மாவு என்னும் ஊரை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கையில் உயிர்த்த ஆண்ட வரை சந்தித்தார்கள். அவர்களோடு உரையாடிய இயேசு அவர்களுடைய மனக்கண்களை திறந்தார். இவ்வாறு இறைவன் எமது மனக்கண்களை திறந்தால் ஒழிய எம்மால் இறைவார்த்தையை உண்மையில் புரிந்து கொள்ளமுடியாது

அருட்பணி. ஜீவேந்திரா போல் அ.ம.தி
M.Phil (Jaffna), M.A. (Coimbatore)

. வேதநூலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது கிறிஸ்தவ - பிற மதங்களிடையே நடைபெற வேண்டிய உரையாடலையும் அவர்களுக்குள் ஏற்படும் ஒன்றிப்பையும் வலியூட்டும் நிகழ்வாக ஜனவரி மாதத்தின் நான்காம் வாரத்தில் கொண்டாடப்படும் 'இறைவார்த்தை ஞாயிறு' விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இம்மடல் வழியாக திருத்தந்தை அவர்கள் இறை வார்த்தைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். அதுமட்டுமல்ல இறைவார்த்தையை கேட்போர் தமது இறைவாழ்வில் முதிர்ச்சி அடையவும் அது வழி சமைக்கும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

புத்தாண்டில் மலரும் எமது பாதுகாவலன் இதழில் தொடர் ஆக்கமாக திருத்தந்தையின் இத்திருத்தூது மடலில் தமிழ் மொழிபெயர்ப்பை எதிர்பாருங்கள்...

# இது ஓர் ஒளி விழாக்காலம்

கரவையூர் செல்வம்

**முன்னுரை**

ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒரு முன்னுரை தேவையா? இது ஓர் இலக்கிய மரபா? அன்றோல் பாரம்பரிய பழக்கமா? இது ஓர் ஒளி விழாக்காலம் என்று தலைப்பிட்டேன் ஒரு சிலர் இல்லையே. இது திருவருகைக் காலமல்லவா? என்று கேட்கலாம் நியாயமான கேள்விதான் ஆனால் திருச்சபையின் கால அட்டவணையின்படி இத் திங்கள் முதலாம் திகதி திருவருகைக்காலம் துவங்கியது இருப்பினும் அதற்கு முன்னரே சென்ற மாத தொடக்கத்திலேயே ஒளிவிழாக்கள் நடைபெற்றன நானே இரு ஒளி விழாக்களில் பங்குபற்றி விட்டேன்! பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் வீடுதலைக்கு முன்னரே ஒளிவிழா வைக்க வேண்டுமென்று கார்த்திகைத் திங்களிலேயே நடாத்தி முடித்துவிட்டு நிம்மதியாக பெருமூச்சு விட்டுவிட்டார்கள்.

**வணிகக் கோலம்**

வணிகத்தில் ஈடுபட்டோர் அதற்கும் முன்னரே நத்தார் என்ற பெயரோடு கிறிஸ்மஸ் தாத்தாவின் உருவத்துடனும் வண்ண வண்ண மின்விளக்குகளை கண்களை கவரும் வகையில் வியாபாரம் செய்கின்றனர் வட அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் போட்டி போட்டுக் கொண்டு ஐப்பசித் திங்களிலேயே நத்தாரை அறிவிக்க ஆரம்பித்து விடுவார்கள். அறிவிக்கவல்ல வாணிபத்தை துவக்கிவிடுவார்கள்.

ஒரு காலத்தில் கிறிஸ்தவ நாடாக இருந்த வட அமெரிக்கா இப்பொழுது கிறிஸ்மஸ் என்ற சொல்லை நீக்கி விடுதலை நாட்களாக (Holiday Season) அழைக்க ஆரம்பித்து விட்டார்கள். அதுமட்டுமன்றி பொது இடங்களில் கிறிஸ்மஸ் குடில்கள் போடுவதை சட்டப்படி குற்றமாக்கிவிட்டார்கள். மதசார்பற்ற அரசியல் வேறு (Secular State) மதமே இல்லாத சமூகம் வேறு (Secularism) ஆனால் வெள்ளைத்தோலுடன் காட்சிதரும் கிறிஸ்தவர்கள் தான் வேற்றுமைகளை வளர்க்கும் ஒரு ஜனாதிபதியை தேர்ந்தெடுத்தது மட்டுமல்ல இன்னமும் டொனால்ட் ட்ரம்புக்கு ஆதரவளித்தும் வருகின்றார்கள். தங்கள் நாணயத்தாளில் இன்னமும் "in God we trust" என்று தான் டொலரில் எழுதியுள்ளார்கள். ஆனால் நடைமுறையில் டொலரில் தான் அவர்களின் நம்பிக்கை உண்டு. வல்லரசுகளுள் ஒன்றான வடஅமெரிக்காவில் அரசியலிலும் சமூகத்திலும் மதத்திலும் முரண்பாடுகள் இன்று நிறையவே உண்டு இது வளர்ச்சி பெற்ற நாடா? தொழிநுட்பரீதியாக வளர்ந்திருக்கலாம். ஆனால் கலாசார பண்பாட்டு ரீதியாக பின்னடைவு தான் கண்டுள்ளது. இருளில் வழுகிறது. போப் பிரான்சிஸ் அவர்களின் துணிச்சலான கத்தோலிக்க மதச் சீர்திருத்தத்திற்கு எதிரிகளாக இருப்பவர்கள் வட அமெரிக்க கார்த்தினல்களும் , ஆயர்களுமே (எல்லோருமல்ல) என்று கூறின் மிகையாகாது. இதற்காக சமூகத்தொடர்பு ஊடகங்களை வெகுவாகப் பயன்படுத்துகிறார்கள். இதையெல்லாம் நான் இவ்விடத்தே குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் கிறிஸ்து இல்லாத கிறிஸ்மஸ்களை விடுதலைக்காலம் என்று குறிப்பிட்டு எதைக்கொண்டாடுகின்றோம் என்று தெரியாதா? தெரிய விரும்பாத ஒரு மாயையில் பல நாடுகள் வளர ஆரம்பித்து விட்டன. இதில் கொழும்பு நகரமும் இணைகிறது.

**கிறிஸ்மஸ் மரம்**

தொண்ணூறு அடி, நூற்று ஐம்பது அடி என்று கிறிஸ்மஸ் மரத்தைக் கட்டி அதை அரசியல் வாதிகளும் இராணுவத்தினரும் திறந்து வைத்து அதைக் கொண்டாடுகின்றார்கள் இதுவும் ஒரு மாயை தான் இவற்றைப் பார்த்து ஏமாறும் கிறிஸ்த்தவர்களும் உண்டு

**ஒளி விழா**

ஒளிவிழாவின் பொருளை உணர்ந்து கொண்டால் அந்த விழாவை எப்பொழுதும் கொண்டாடலாம் ஐப்பசி 27ம் நாள் தீபாவளி கொண்டாடினோம் இம்மாதம் 11 ம் நாள் விளக்கீட்டு தினம் கிறிஸ்மஸ் நோக்கி கொண்டாடப்படுவது ஒளி விழா. இந்த மூன்று விழாக்களிலும் இரு ஒற்றுமைகள் உள்ளன. முதலாவது மூன்று விழாக்களும் ஒளியை மையமாக்கியுள்ளது. இரண்டாவது மூன்று விழாக்களிலும் ஒளியை வெளியே ஏற்றி வழிபாடு செய்கின்றோம். ஆனால் பெரும் பான்மையான மக்கள் அகத்தே இருளில்தான் வாழுகின்றார்கள். புறத்தில் ஒளி அகத்தில் இருள் இதையே இரட்டை வாதம் - என்கிறோம். ஆந்த இரட்டை வாதமே இருளில் எங்களைத் தள்ளிவிடுகிறது.

**இயேசு உலகளாவியவர்** (Jesus is Universal)

"உலகின் ஒளி நானே என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பர்". என்று கூறிய இயேசு தனது உலகப்பிரசித்தி பெற்ற மலை உரையில் மிகத் தெளிவாகவே சொன்னார் "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்". இயேசு "நீங்கள்" என்று விழித்து அனைத்து மக்களையும் நோக்கியே இயேசு கூறிய இந்த ஒளி எங்குமுள்ளது. ஆனால், நாம் இருளையே விரும்புகின்றோம் இருளிலேயே வாழுகின்றோம் 21ம் நூற்றாண்டை உன்னைப் பார்க்கும் பொழுது. மக்கள் படித்தவர்களும் சரி படியாதவர்களும் சரி மதத்துடன் இணைந்தவர்களும் சரி இணையாதவர்களும் சரி இருளையே நாடுகின்றார்கள் இதைக் கேட்கும் பொழுது ஒரு பைத்தியகாரத்தனம் என்றல்லவா சொல்லவேண்டும் ஆனால் அது தான் உண்மை யதார்த்தத்தை விட மாயையில் வாழ்வது தான் இலகுவானது.(Illusion is more livable than reality)

**முகமூடிகள்**

நாம் முகமூடிகள் போட்டு வாழும் பொழுது



உள்ளத்தில் ஒன்று புறத்தில் வேறொன்றாக வாழும் பொழுது. அயலவர் பார்க்க ஒரு முகம் என்னகத்தே இன்னோர் முகம் என்று வாழும் பொழுது நாம் இருளையே விரும்பி இருளிலேயே வாழ்கின்றோம். முகமூடி போடுவதொன்று காலப்போக்கில் நானே அந்த முகமூடியாக மாறிவிடுவது வேறொன்று. அங்ஙனம் மாறும் பொழுது நான் உளநோயாளியாக இருக்கின்றேன். இது. இருளில் வாழும் வாழ்க்கை இப்படி இருளில் வாழ்பவர்கள் ஒளியை விரும்பமாட்டார்கள்.

மதத்தோடு, இனத்தோடு, மொழியோடு, நாட்டோடு என்னை அடையாளப்படுத்தி (Identification) அந்த அடையாளப்படுத்தலில் தான் நான் எனது அடையாளத்தைப் (Identity) பெறுகிறேன் என்றால், அந்த அடையாளம் ஒரு பொய்யான அடையாளம் (False Identity) .

ஒரு மதத்துடன், ஒரு மொழியுடன், ஒரு இனத்துடன், ஒரு நாட்டுடன், ஒரு சாதியுடன் எம்மை அடையாளப்படுத்துவது (Identification) பொய்யான அடையாளமா? (False Identity) என்று வாசகர்கள் கேட்கலாம். ஆம், என்பதுதான் எனது உறுதியான சிந்தனை. ஏன்? இவை அவைத்தும் புறத்திலிருந்து வரும் அடையாளங்கள். புறத்திலிருந்து வரும் எந்த அடையாளமும் பொய்யானது. இவை ஓர் உளவள சமூக அடையாளங்கள் மட்டுமே. அடையாளப்படுத்துவது வேறு. ஒரு இனத்துடன், ஒரு மொழியுடன், ஒரு நாட்டுடன் நாம் சேர்ந்திருப்பது வேறு ( Identification is different from a sense of belonging. அதாவது ஒரு இனத்துடன், மதத்துடன், மொழியுடன், நாட்டுடன் இணைந்திருப்பது வேறு. அத்துடன் என்னை அடையாளப்படுத்தி அதையே என்னுடைய அடையாளமாக்குவது (My Identity) வேறு.

ஆயினும், இந்த உளவள அடையாளம் உலகில் வாழ்வதற்கு தேவையுள்ளது. அதனால் அது உண்மையான அடையாளமாகாது. இங்ஙனம் தங்களை அடையாளப்படுத்துவோர்தான். வேறுபாடுகளைவளர்கிறார்கள். வன்செயலில் ஈடுபடுகின்றார்கள். புனித போர் என்ற முரண்பாட்டில் போர் புரிகிறார்கள். மனிதர்களைக் கொலை செய்கிறார்கள். அதை நியாயப்படுத்துகிறார்கள். பாதுகாப்புப் பேசி ஆயுதக் கொள்வனவு செய்கிறார்கள். இது இருளில் வாழும் மக்களின் செயற்பாடு அகத்தே இருளில் வாழ்ந்து கொண்டு கரங்களில் ஒளியை தாங்குவது பொய்யான வாழ்க்கை. ஆயினும் வல்லரசுகள் துஞ்சித்தும் தயங்காது. 'நாட்டின் பாதுகாப்பிற்கென' கோடிக்கணக்கான பணத்தை செலவிடுகின்றார்கள். தங்கள் கையிலும் அள்ளிப் போட்டுக் கொள்கிறார்கள். கொடை வள்ளல்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டு இப்பணத்தில் ஒரு பகுதியை ஆலயங்களுக்கும் கொடுக்கின்றார்கள். இது பொய்யான வாழ்க்கை. இருளில் வாழும் மக்கள். இவர்கள். இவர்களிடம் இருந்து அப்பணத்தைப் பெற்றுக் கொள்ளும் மதத் தலைவர்களும் இருளில்தான் வாழ்கின்றார்கள். இதை நன்குணர்ந்து மக்கள் இத்தலைவர்களை ஏற்றுக் கொள்வதில்லை. இருந்தும் அகத்தில் ஏற்றுக்கொள்ளாமல் புறத்தில் ஏற்றுக் கொள்வதும் பொய்யான வாழ்க்கைதான். இப்பொழுது தெரிகின்றதா. மக்கள் ஏன் இருளை விரும்புகிறார்கள் என்று?

இயேசு ஒரு ஞானி அந்த ஞானத்தில் உதித்த சொற்களைப் பாருங்கள் "ஒளி உலகிற்கு வந்திருக்கும் தம் செயல்கள் தீயவனாய் இருந்ததால் மனிதர் ஒளியை விட இருளையே விரும்பினர். இதில் தான் அவர்களுக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு அடங்கியுள்ளது. தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர். தங்கள் தீச் செயல்கள் வெளியாகி விடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை" (அரு3:20-24)இயேசுவின் வார்த்தகளைக் கவனியுங்கள். இருளில் வாழும் இந்த மக்கள் "ஒளியை வெறுக்கின்றனர். தங்கள் தீச் செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை" "அஞ்சி" அதாவது பயம். இந்தப் பயம் எங்கே வருகின்றது. அகத்தே நான் பிளவுபடும் பொழுது (Disconnected within) பயம் தோன்றுகிறது. இந்தப் பயத்தை மூடி மறைக்க வெளியே ஆணவப் பேச்சு, அதிகார வெறி, ஒளிக்கு வர அழைப்போரை அழிப்பு. இவ்வண்ணம் மேலும் மேலும் இருளுக்குள் சென்று வீகிறார்கள். இவர்களை ஆசீர்வதிக்கும் மத குருக்களை என்னவென்று கூறுவது? இந்த மத குருக்கள் இருளில் இருந்து கொண்டு ஆசி பெற வரும்படி அழைக்கிறார்களா? அப்படி அழைத்ததாக நான் இன்றுவரை அறியவில்லை. இருளில் இருந்து கொண்டு இருளில் இருப்பவர்களை ஒளிக்கு அழைக்க முடியுமா. மதவேறுபாடுகளை, இன வேறுபாடுகளை, சாதி வேறுபாடுகளை, சபை வேறுபாடுகளை வளர்ப்பவர்கள் இருளில் இருப்பவர்கள் இவர்கள் எப்படி இருளில் இருப்பவர்களை ஒளிக்கு அழைக்க முடியும்?

**ஞானிகள் அழைப்பார்கள்.**

ஞானிகள் ஒளியில் வாழ்பவர்கள். இயேசு ஞானிகளுக்கு ஞானி. ஓர் மதத்தைச் சாராத மதங்களை மேவிய ஞானி. இந்த ஞானிதான் சொன்னார். "நீங்கள் உலகின் ஒளி" இதன் அர்த்தமென்ன மனிதனாக அல்லது மனுஷியாக பிறந்த அனைவருக்குள்ளும் இந்த ஒளி உண்டு. ஆனால், பொய்யான வாழ்க்கை வாழும் பொழுது முகமூடிகள் அணிந்து வாழும் பொழுது. பொய்யான அடையாளங்களோடு வாழும் பொழுது அந்த ஒளி மறைக்கப்படுகின்றது. ஆனால், அழிக்கப்படுவதில்லை. பொய் மையில் இருந்து உண்மைக்கு வரும் பொழுது; முகமூடிகளை ஒவ்வொன்றாக கழைந்து வரும் பொழுது, எனது பற்றுக்களை அறுத்து வரும் பொழுது, என்னை வெறுமையாக்கி வரும்பொழுது அந்த ஒளி சிறிது சிறிதாகப் பிரகாசிக்கும். ஞானிகளின் வாழ்வில் இதைப் பார்த்திருக்கின்றோம்.

இந்த ஒளிக்கு வரும்படி தான் இயேசு நித்தமும் எம்மை அழைக்கின்றார்கள். இதற்கு ஒரு திருவழிபாட்டு அட்டவணை இல்லை. ஒளி விழாவை கிறிஸ்துவில் என்றும் பார்க்கலாம்.

ஒளி விழாக்கள் இப்பேருண்மையை எடுத்தியம்ப வேண்டும். ஒளிவிழாக்களை கலை விழாக்களாக மாற்றுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். கலை விழாவில் ஒளியின் உண்மை புரிவதில்லை, தெரிவதில்லை.

**வழி என்ன?**

இந்த ஒளியைப் பிரகாசிக்க வைக்க வழி என்ன? எம்மை வெறுமையாக்குவது ஒன்று, இரண்டாவது. ஆழ்மனத்தியானம். சீடத்துத்தைப் பற்றி இயேசு கூறினார். "என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள் ஆகியோரையும், ஏன் தம் உயிரையுமே என்னை விட மேலாகக் கருதினால், வர் என் சீடராயிருக்க முடியாது. தம் சிலுவையைச் சுமக்காமல் என்பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்க முடியாது" (லூக் 14:26-27) ஒருவர் தன்னை வெறுமையாக்கும் படிமுறையில் (Process) வாழாமல் இயேசுவின் சீடராக இருக்க முடியாது. இப்படிப்பட்ட சீடர்கள் தான் ஒளியை நோக்கி பயணிப்போர். (தொடர்ச்சி 15ம் பக்கம்)

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# நம்மில் நம்மோடு

தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது
யூத நிலத்தினிலே
சத்திய வேதம் நின்று நிலைத்தது
தாரணி மீதினிலே
எத்தனை உண்மைகள் வந்து
பிறந்தது இயேசு பிறந்ததிலே –
இத்தனை நாளும் மானிடம் வாழ்வது
இயேசுவின் வார்த்தையிலே

என்ற கவிஞர் கண்ணதாசன் எழுதிய இறவாத காவியமான இயேசு காவியத்தின் பொன்மொழிகள். பிறப்பு ஓர் அற்புதம். அந்தப் பிறப்பு ஓர் வரப்பிரசாதம் - சிலபிறப்புக்கள் ஆச்சரியத்தையும், ஆக்கிரமிப்பையும், அதிர்ச்சியையும் மானிட சமூகத்திற்கு ஏற்படுத்தி இருக் கின்றது. மனிதர்கள் தொடர்ந்து பிறந்து கொண்டே இருக்கின்றார்கள் - படைத்தவன் தன் படைப்புத் தொழிலை நிறத்திக் கொள்ளவில்லை. இன்னும் தகுதியற்ற பலவீனமான மனிதர்களை பயன் படுத்தி தன் படைப்பை செயற்படுத்திக் கொண்டே இருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் இந்த மண்ணில் பிறக்கும் போதெல்லாம் கடவுள் இன்னும் உயிர வாழ்ந்து கொண்டு இருக்கிற உண்மையை வெளிப்படுத்துகின்றது. என்று இரு அறிஞர் கூற்று உண்மையை வலுப் படுத்துகின்றது. ஆனாலும் வரலாற்றில் நடந்த ஓர் நிகழ்வு வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி கிறிஸ்துவுக்கு முன் (கி.மு) மற்றும் (கி.பி) என்ற ஒரு சகாப்தங்களை ஏற்படுத்திய நிகழ்வு என்றால் அது கிறிஸ்து மறப்பு மட்டுமே ஆகும் .

வரலாற்றின் கணிப்பில் இரண்டு இயல்புளை கொண்டவராக எண்ணப் படுகின்றார்.

**கடந்தவர்** ( Transcentent)
**கலந்தவர்** ( Tmmant )

**கடவுள் கடந்தவர்.**

கடவுள் கடந்தவர் என்ற பழைய சிந்தனை நம் எண்ணங்களில் செயற்பாடுகளில் நம்பிக்கையில்லாத் தன்மைளையும் எல்லாம் கடந்தவர் என்ற மனநிலையையும் நமக்குள் ஏற்படுத்தி ஒரு வேற்றுமை உணாவை நமக்குள் தோன்றச் செய்து கடவுளின் இருப்பை தூரமாக்கி விடுகின்றது.

**கடவுள் நம்மோடு கலந்தவர்**

நம்மோடு கலந்தவர் என்ற இயல்பு மானிட சமுகத்தின் விடிவெள்ளியாக மனிதம் மறக்கப்படும் தன்மையை மாற்றியமைக்க நம்மில் ஒருவராகக் கலக்க உறவாட ஆசை கொண்டவராக நம் மத்தியில் பிறக்க திருவுளம் கொண்டார். இவர் தான் இம்மானுவேல் கடவுள் நம்மோடு இதைத் தான் வாக்கு மனிதனானார். நம்மிடையே குடி கொண்டார். ( யோவான் 1 : 14) என்ற யோவான் நற்செய்தியாளா தெளிவுப்படுத்துகின்றார். உலகில் ஒவ்வொன்றும் ஒன்றைச் சார்ந்தும் இணைந்து வாழவே ஆசைப்படுகின்றது இதுவே படைத்தவனின் நோக்கமும் எண்ணமும் ஆகும் .

" நிலவு வானத்தைத் தேடுகின்றது-
நீர் நிலத்தைத் தேடுகின்றது
கொழ கொப்பை தேடுகின்றது-
இவை இயற்கையின் நியதி
மான் நீரோடையைத் தேடுகின்றது
பசு கன்றைத் தேடுகின்றது
புலி இரையை தேடுகின்றது இது
விலங்கினந்தின இயல்பு
குழந்தை தாயைத் தேடுகின்றது
காதலன் காதலியைத் தேடுகின்றான்
ரசிகன் கலையைத் தேடுகின்றான்
இவை மானிடத்தின் நியதி

ஆனாலும் கடவுள் மனிதனைத் தேடி வருகின்றார் . மானிட இனத்தின் பாவக் கறைபோக்கி பாருலகில் அன்பை, அமைதியை சமாதான உணர்வை மனித குலம் நிறைவாகக் கொண்டு வாழ்வதற்கு இவை இறைனின் மீட்புத் திட்டம் -

**கடவுள் மனிதனாக முடியுமா?**
**முடியும் என்பதே கிறிஸ்மஸ்.**

காலம் காலமாகவே இஸ்ரயேல் மக்களின் அடிமைத் தனத்தை உணர்ந்த அறிந்த இறைவன் அவர்களின் கூக்குரலுக்கு செவிமடுத்து அவர்களை வாக்களித்த நாட்டிற்குக் குடியேற்ற குலமுதல்வர்களைத் தேர்ந்தெடுத்தார். (வி.ப 3 : 17) காலம் முழுவதும் அவர்க்ள் என் மக்கள் என்ற உரிமையிலே அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டார். ஆனாலும் அவர்கள் இறைவனின் அன்பை பாசத்தை அரவணைப்பை மறந்து பவ உணர்வுகள் கொண்டவர்களாக வாழத் தொடங்கினார்கள். இவ்வாறு அடிமை நிலையும் வணங்காக் கழுத்து உள்ளவர்களாக இருந்த மக்கள் மத்தியில் இறைவாக்கினர்களை அனுப்பினார் இறுதியாகத் தனது ஒரே மகனையும் அனுப்பினார். அப்போது வார்த்தையான இறைவன் மனித உயிரானார். இங்கு கடவுளின் அளவில்லாத அன்பும், கருணையும் வெளிப்படுத்தப்படுகின்றது - அவரின் பிறப்பில் மானிட சமூகம், நம்பிக்கையையும் ஒளியையும் பெறுகின்றார்கள் .

**கிறிஸ்து பிறப்பின் நோக்கம்**

**1) இருளில் இருப்போருக்கு ஒளியை அளிக்க**
**2) வாழ்வில் கைவிடப்பட்டோருக்கும் , ஒடுக்கப்பட்டோருக்கும் நம்பிக்கை ஒளியை உள்ளத்தில் ஏற்ற**

**இருளில் இருப்போருக்கு உளியை அளிக்க**

மனித வாழ்வு இருள் சூழ்ந்த அவல நிலைக்குத் தள்ளப்பட்டு மனித நேயம் மறுக்கப்பட்டு அடக்கு முறைக்கும் அதிகார வர்க்கத்தினரின் ஆணவத்திற்கும், அடிமைப்பட்டு நமபிக்கையிழந்து அச்சமும் பயமும் நிறைந்த ஒரு கால சூழ்நிலைக்குள் தவித்தார்கள். எனவே தான் உலகினரின் வாழ்வில் நம்பிக்கை தீபமாய் நம் மத்தியில் கிறிஸ்து உதித்தார்.


அருட்பணி. M.நிர்மலராஜ் (செ.தா)

**இருவகை மனிதர்கள் இருளில் வாழ்கின்றார்கள் :**

**இருளையே வாழ்வாகக் கொணடவர்கள். –**

மனித வாழ்வில் சுய நலமும் அதிகாரச் செருக்கும், ஆணவமும், பதவி மோகமும் நிறைந்த மன நிலையில் பிறரின் உணர்வுகளை உரிமைகளை மனித நேயத்தை மதிக்காமல் வாழும் மனிதரிடையே தமது ஏழ்மையான எளிமை நிறை பிறப்பால் உலகினரின் வாழ்வில் உளத்தாக்கத்தை ஏற்டுத்துகின்றார்

**2) இருளில் வாழ வைக்கப்படுபவர்கள்**

மானிட வாழ்வில் அறியாமை, இயலாமை, பலவீனம் போன்ற காரணங்களால் உள்ளத்தின் ஆழத்தில் துன்ப மும், வேதனையும், துயரமும் அனுபவிக்கும் மானிட சமுகத்தின் கடை நிலையில் உள்ளவருக்குக் கிறிஸ்து பிறப்பின் உள்நோக்கம் நீதிமான்களை அல்ல பாவிகளை அழைக்க வந்தேன் என்ற ஆத்ம ரீதியான மன அமைதியையும் சமாதானத்தையும் அளிப்பதாக உள்ளது -

**வாழ்வில் கைவிடப்பட்டோருக்கும்,**
**ஒடுக்கப்பட்டோருக்கும் நம்பிக்கை ஒளியை உள்ளத்தில் ஏற்ற**

வரலாற்றுப் பதிவுகளில் மானிட சமூகம் பல்வேறு அடக்குமுறைகளையும், அதிகார துஸ்பிரயோகங்களையும் எதிர்கொண்டு, துன்ப வேதனைகளையும் தொடர் இழப்புகளையும் சுமந்து கொண்டு சிக்கித் தவித்தார்கள். ஏன் இன்னும் அவைகள் நமது சமூகத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இவ்வாறான துன்பியல் சமூகத்தில் தான் வாழ்வின் அர்த்தத்தை, மேன்மையை இழந்து தடுமாறும் போது நம் மீட்பரின் பிறப்பு நமக்கு அளவில்லாத மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் தருகின்றது. புனித அகுஸ்தினாரின் கூற்றுப்படி 'கடவுள் நம்மை மனிதனாக மாற்றினார். நாம் கடவுளாக மாறும்பொருட்டு'. எனவே தான் இயசுவின் பிறப்பின் ஒவ்வொரு நிகழ்வும் நமது வாழ்வியல் போராட்டத்திற்கான பல்வேறு அர்த்தங்களை அளிக்கின்றது.

நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கூற்றுப்படி 'கிறிஸ்து பிறப்பு விழா என்பது உணர்வு பூர்வமான நிகழ்வு அல்ல மாறாக மனதில் மாற்று உணர்வுகளை விதைக்கின்ற விழா'. கிறிஸ்து பிறப்பு விழாவில் பல்வேறு மனநிலையில் உள்ளவர்கள் மாற்றம் பெற்றார்கள். குறிப்பாக சந்திக்காத நபர்களை சந்தித்தார்கள்.

விண்ணும் மண்ணும் சந்தித்தன - வறுமையும் வாழ்வும் சந்தித்தன. எனவே நாமும் நான் என்ற ஆணவம், பணம், பட்டம், பதவி, உயர்ந்தவன் செல்வாக்கு உள்ளவன், அதிகாரம் கொண்டவன் என்ற போர்வையையும் கவசங்களையும் களைந்து விட்டு, மானிடத்தின் விடிவுக்காக, நமது மீட்புக்காக தம்மை தாழ்த்தியவரிடம் சரணடைந்து வாழ்வோம். அப்போதுதான் மானிடத்தின் சுவாசத்தின்வலிகளையும், துயரங்களையும் நம்மால் உணர முடியும். எனவே கிறிஸ்மஸ் விழாவை மகிழ்வுடன் கொண்டாடும் நாம் அர்த்தமுள்ள வழியில் செயற்படுவோம்.




**"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது"**

மார்கழி மாதம் மனதிற்கு இதமான மாதம். மாட்டுத் தொழுவத்திலே மாமரி மடியினிலே, சூசை தந்தையின் அரவணைப்பிலே, வைக்கோல் கற்றை நடுவினிலே மழலையாக வந்துதித்த இயேசு பாலனின் அழகிய வதனம் எம் நெச்சுக்குள்ளே ஊஞ்சலாடும் மகிழ்வான காலம்.

இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு அந்நியர் ஆக்கிரமிப்பு, உரோமை அடிமைத் தனம் அரசியலை மதமாக்கி மதத்தின் பெயரால் அட்டூழியம், பெண்களுக்கெதிரான வன்முறைகள், வியாபார மயமாக்கப்பட்ட ஆலயச் சடங்கு முறைகள் போன்ற இருள் சூழ்ந்திருந்த பாலஸ்தீன தேசத்திலே நம்பிக்கையின் ஒளியாக விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலம் அமைத்து பிறந்தவரே பாலகன் இயேசு.

வானவர் கீதம் இசைக்க இடையர்கள் விரைந்து வந்தார்கள். விண்மீன் வழிகாட்ட கீழ்த்திசை ஞானிகள் விரைந்தோடி வந்தார்கள். ஞாலத்தை அமைதியால் ஆழ நம்பிக்கையின் நட்சத்திரமாய் மாட்டுத் தொழுவத்தின் நடுவினிலே கை அசைத்து, கால் அசைத்து ஆசீர் வழங்கி நின்றார் பாலகன் இயேசு. மறுபுறத்தில் குழந்தையின் பிறப்புச் செய்தியறிந்து கதிகலங்கினான் ஏரோதன். படை திரட்டி பல மழலைகளுக்கு பாடை கட்டினான் தன் வன்மத்தால். கதை முடிந்ததென்று கொக்கரித்தான். ஆனால் நம்பிக்கையின் ஒளி சுடர்விட்டு பிரகாசித்தது அன்று.

ஈராயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தது. இருள் அகலவில்லை. இவ் உலகில் பல ஏரோதுகளின் வன்மத்தால் அழிவுகளும், அட்டூழியங்களும் தாராளமாய் மலிந்து போயின எம் மண்ணில்.

போர் தந்த வடுக்கள் இன்னும் மாறவில்லை. காணாமல் போனோரின் நீண்ட கதைகளும், நாளுக்கு நாள் நடந்தேறும் நிலப்பறிப்புக்களும், திட்டமிடப்பட்ட குடியேற்றங்களும், எமக்காக போராடியவர்களின் பரிதாபங்களும் நீண்டுசெல்லும் இருளாக எம்மைச் சூழ்ந்துள்ளன. நம்பிக்கைத் துரோகம், ஏமாற்றம், காட்டிக்கொடுப்பு, வன்முறைக் கலாசாரம், களவு, கொலை, கொள்ளை, சிறுவர் துஷ்பிரயோகம், சுரண்டல், போதைப் பொருள் பாவனையென செயற்கை அழிவுகளோடு கூடிய திடீர் மரணங்கள், இனம் காணப்படாத நோய்கள், காலைநிலை மாற்றம் போன்ற இயற்கை அனர்த்தங்களும் சேர்ந்து நீண்டு கொண்டே செல்கிறது தீமைகளின் பட்டியல். நீண்டு செல்லும் இத்தீமைகளின் பட்டியலோடு அதிகாரக் கதிரைக்கான போட்டி, மக்களுக்கு வழிகாட்ட நல்ல தலைமைத்துவம் இல்லாத வெற்றிடம் என்பன எம் இனத்தின் இருப்பை எம் மண்ணில் கேள்விக்குறியாக்கி நிற்கும் சூழலில் மீண்டுமொரு பாலகனின் பிறப்பு எமக்கு நம்பிக்கை தரவேண்டும். எம்மைச் சுற்றியிருக்கும் இருளை நீக்க வேண்டும்.

பாலகனே நீர் மீண்டும் எம் மண்ணிலும் எம் உள்ளத்திலும் பிறக்க வேண்டும். உம்பிறப்பால் எம்மைச் சுற்றியுள்ள இருள் அனைத்தும் நீங்க வேண்டும். மனிதர்கள் மனிதர்களை மதிக்க வேண்டும். மனிதம் உயர்வாக பேணப்பட வேண்டும். தன்னலமில்லா நல்ல தலைவர்கள் உருவாக வேண்டும். ஏரோதுகளின் அட்டூழியம் அகலவேண்டும். காரிருள் சூழ்ந்த எம் மண்ணில் நம்பிக்கையின் சுடரொளி உதயமாக வேண்டும்.

அன்ரன் மரியசேவியர் அபிநாஷ்
புனித. பத்திரிசியார் கல்லூரி

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## சத்திரத்தில் இடமில்லாதவரே சரித்திரத்தில் இடம் பிடித்தார்

 செ.போசப்பாலா

ஒவ்வொரு பிறப்பும் இறை சித்தம் மூலமே கிடைக்கப்பெறுகின்றது. அந்தப் பிறப்பு எம் வாழ்வில் ஓர் முறைதான் என்பதை உணரும் போதுதான் அதன் புனிதம் காக்கப்படுகிறது. இறந்த பின்பும் பலர் வாழ்வு மக்கள் மனங்களில் நினைவு கூரப்படுவதற்கு இதுவே காரண மாகும்.

பாலக இயேசுவின் பிறப்பை இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டிலும் உலகம் நினைவுகூர்ந்து அந் நிகழ்வில் மகிழ்வடைகின்றது என்றால் அந் நிகழ்வு இறைசித்தத்தின் மகிமைக்கு ஏற்ப அமைந்ததே காரணமாகும். சாதி, மத, இன, நாடுகள் கடந்து உலகமே கொண்டாட இறை இயேசுவின் பிறப்பு உலகத் திருஅவையின் வரவாகி வரலாறானது.

உலகத் திருஅவையின் ஓர் அங்கமாகவும், கிறிஸ்து அவர்களாகவும் இணைந்து கொண்டவர்கள் பல்வேறு தளங்களில் அர்ப்பணத்துடன் தமது வாழ்வால் சாட்சி பகர்ந்து வருவது கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை செயலால் வெளிப்படுத்தும் சாட்சிகளே ஆகும். இவற்றை மதம் கடந்து, மனித நேயப்பணிகளால் மகிழ்வூட்டி மகிழும் சந்தர்ப்பங்கள் யாவும் ஒளி விழாக்களே.

உலகின் ஒளியாக பிறந்த பாலக இயேசுவின் பிறப்பு விழாவை இந் நாட்களில் கொண்டாடும் உள்ளங்கள் அவரது பிறப்பு எங்கே நிகழ்ந்தது? யாரால் தெரிவிக்கப்பட்டது? என்பதை எதிர்கால சந்ததிக்கு சொல்ல வேண்டிய பொறுப்பினையும் கடமையினையும் கொண்டுள்ளனர். இதுவே ஒளிவிழாவின் நோக்கமாகும்.

சத்திரத்தில் இடமில்லாதவரே சரித்திரத்தில் இடம் பிடித்தார். இன்று ஒளி விழாக்கள் நடைபெறுவதற்கு இயேசுவின் இத்தகைய பிறப்பே காரணமாக அமைந்தது.



"அஞ்சாதீர்! உங்களுக்கு ஓர் நற்செய்தி. உங்களுக்காக ஓர் மீட்பர் பிறந்துள்ளார். அதனை பெத்லேகேம் என்னும் ஊரில் மாட்டுத் தொழுவத்தில் சென்று பாருங்கள்" என்ற வார்த்தையை கேட்டு பொறுப்புடன் நம்பிக்கையுடன் இடயர்கள் செயற்பட்டது போன்று நாமும் பொறுப்புடனும், நம்பிக்கையுடனும் செயற்பட வேண்டும் என்பதை ஒளி விழா தன் செய்தியாக தெரிவித்து நிற்கின்றது.

உள்ளதை உள்ள படி சொல்வதும் உண்மைளை வெளிப்படுத்துவதும் எமக்குள்ள பொறுப்பாகும். உண்மைச் சாட்சிகளாக மாறி செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையு மாகும்.

இன்றைய ஒளிவிழாக்களில் சமூக கலாசார சீர்கேடுகளுக்கு இடமளிக்காமலும், தவறான வழிகாட்டலில் சமய, சமூக விழுமியங்களை சிதறடிக்காமலும் நம்பிக்கையூட்டும் நற் செயல்களைப் பகிரக் கிடைத்த சந்தர்ப் பங்களாக ஒளி விழாக்களுக்கு ஒளியூட்டுவோம்.

துன்மாதிரியான செயல்களால் குத்துப்பாட்டு, கும்மாளம், குடி வகை பகிர்வுகளால் கிறிஸ்மஸைக் கொச்சைப்படுத்தாது இறைமகனின் பிறப்பின் ஏழ்மை, தாழ்மை, அன்புப் பகிர்வு முதலானவற்றை முன்நிறுத்தி நற்செயல்களை ஒளிவிழாக்கள் ஆக்கு வோம். எமது பிறப்பின் புனிதத்தைக் காக்கும் முகமாக அர்ப்பணிப்பு நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து புனிதம் நிறைந்த இயேசுவின் பிறப்புக்கு இடறல் விளை விப்பவர்களாக மாறாது கிறிஸ்தவ விசுவாச சாட்சிகளாய் மாறுவோம். ○

# இனிய பயணம் தொடரட்டும்!




2020ம் ஆண்டு இனிதே மலர்ந்து விட்டது: இன்று ஒரு நல்லநாள். இந்நாள் போலவே எந்நாளும் இருக்கட்டும். இறைவனும் மனிதனும் இணைந்து பயணிக்கும்பொழுதே அந்நாள் நன்நாள் ஆகின்றது. இறைவனைப் பிரிந்த மனிதனால் எதையுமே சாதிக்க இயலாது. இறைவனோடு இணைந்த நிலையிலே மனிதன் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் ஏற்றம் பெறுகின்றது.

இறைவனுக்குள் மனிதன் மனிதனுக்குள் இறைவன் என்ற தொடர் நிலைப் பரிமாற்றமே மகிழ்வான வாழ்வின் அடையாளமாகும். சிப்பிக்குள் முத்து, கல்லுக்குள் வைரம், சேற்றுக் குளத்தில் செந்தாமரை, இதயத்துக்குள் ஈரம் என்று பரிவுகாட்டும் உள்ளங்கள் பல பாரினில் பிறக்கட்டும்.

இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னர் ஓர் ஆசிரியர் மாணவனைக் காண்கின்றார். பாடசாலை அனுபவமொன்றினை மாணவன் மீட்டுப் பார்க்கிறான். மனதை நோகடிக்காது மனிதத்தையே நேசிக்கும் அந்த ஆசிரியர் மலைமேல் ஏற்றிய தீபமாக வெளிச்சம் கொடுக்கின்றார். இன்றும் நடமாடும் தெய்வங்கள் நம் மத்தியில் இருப்பதை உணர்ந்தவனாய் பேச ஆரம்பிக்கின்றான்.

**மாணவன்:** சேர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் என் மானத்தைக் காப்பாற்றிய உங்களை, சாகும் வரை மறக்கமாட்டேன்.

**ஆசிரியர்:** நான் மறந்திட்டேன். விபரமாகச் சொல்லுங்க.

**மாணவன்:** சேர், அன்று ஒரு மாணவன் மிகவும் அழகிய கடிகாரத்தை கொண்டுவருவதைக் கண்டேன். அதைக் கண்டதும் எப்படியாவது எடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன் எடுத்துவிட்டேன். பௌத்திரமாக எனது பொக்கற்றுக்குள் வைத்து விட்டேன். தொலைத்து விட்ட மாணவன், "எனது கடிகாரத்தை யாரோ களவாடி விட்டார்" என்று குழறினான். நீங்களோ ஆத்திரப்படாது, நிதானமாகக் கூறினீர்கள். "எல்லோரும் கண்களை மூடுங்கள். உங்கள் பொக்கற்றுக்களை சோதிக்கப் போகிறேன்." முதல் நபரிலிருந்து கடைசி நபர் வரை சோதனை செய்தீர்கள் இடையில் இருந்த என்னை சோதித்ததும் கடிகாரத்தை எடுத்து விட்டீர்கள். ஈற்றில் சோதனை ஆரம்பித்த இடத்திற்கே வந்து "கண்களைத் திறவுங்கள்" என்று கூறிக் கடிகாரத்தை உரிய மாணவனிடம் கொடுத்தீர்கள். அன்று முதல் இன்று வரை என் இதயத்தில் அழியாத இடத்தைப் பிடித்து விட்டீர்கள். உங்களது உயர்ந்த குணத்தை என் மனதில் பதித்து நானும் ஓர் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றேன். சேர் என்னை மறந்திட்டீங்களா?

கலாநிதி வின்சன் பற்றிக், அமதி

**ஆசிரியர்:** நீங்கள்தான் அந்த மாணவர் என்று இப்பதான் தெரியும். ஏனெனில் நான் எனது கண்களை மூடிக்கொண்டே சோதனையில் ஈடுபட்டிருந்தேன். எச்சந்தர்ப்பத்திலும் தவறு செய்தவனைக் கண்டுகொள்ளவோ, காட்டிக்கொடுக்கவோ, தண்டிக்கவோ விரும்பவில்லை. காணாமல் போன பொருளைக் கண்டு பிடிப்பதையே இலக்காகக் கொண்டு இயங்கினேன்.

வாழ்வு என்பது ஒரு தொடர்கதை. இன்பங்களும்- துன்பங்களும், ஏற்றங்களும் - இறக்கங்களும், பலங்களும் -பல வீனங்களும், நிறைகளும் - குறைகளும் தொடர்வதை அவதானிக்கலாம். எனினும் நல்ல நோக்கோடு வளமுற்று வாழ, வளர்வித்து வளர, மகிழ்வித்து மகிழக் கற்றுக் கொள்ளுங்கள். நல்லதையே கேட்டு, நல்லதையே காண, நல்லதையே அவதானிக்க, நல்லதையே எழுத, நல்லதையே வாசிக்க, நல்லதையே சிந்திக்க, நல்லதையே உணர முயற்சி எடுங்கள். இனிய நல் இயேசு இந்த ஆண்டு முழுவதும் வழி நடத்தி, நாம் நல்லவர்களாக வாழ அருள்பொழிவாராக. இயேவின் நற்சீடர்களாக வாழ்ந்து இயேசுமொழி பேசி, இயேசுவழி வாழ்வோமாக. இயேசுவின் வழியை விட்டு வேறுவழி செல்லாது விருப்பத்தோடு இறைவனோடு, இயற்கையோடு, மனிதரோடு இணைந்து புனித வாழ்வுப் பயணத்தை மேற்கொள்வோம். இனிவரும் நாளெல்லாம் இனிதாக மலர இறைவன் துணை நிற்பாராக.

இறுதியாக ஒரு சம்பவம். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஜெயந்திநகர் புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் ஒளிவிழா நிறைவில் கிறிஸ்மஸ் பப்பா ரொபிகளை அள்ளி அள்ளி வீசினார். பல ரொபிகள் மேடையில் சிக்கி விட்டன. இதனை அவதானித்த ஒரு சிறுமி மேடையில் ஏறி அமைதியாகச் சேகரித்தாள். ஏனைய மாணவர்களும் மேடை ஏறி ரொபிகளை எடுத்து அவர்களே உண்டனர். அச்சிறுமியோ தான் சேகரித்த அனைத்து ரொபிகளையும் மற்றைய மாணவர்களுக்குக் கொடுத்தாள். தனக்கென்று அவள் எதையுமே எடுக்கவில்லை.

**எடுக்க எடுக்கக் கிடைப்பது சிற்றின்பம்.**
**கொடுக்கக் கொடுக்கக் கூடுவது பேரின்பம்.**
**யாம் பெற்ற இன்பம்**
**பெறுக இவ்வையகம்.**

## அர்த்தம் புரிவோம்

**கிறிஸ்மஸ் தாத்தா : பகிர்வு**



புனித நீக்கலஸ். மிகுந்த வசதி படைத்த இவர் சொத்துக்களை ஏழைகளுக்கு கொடுப்பதில் மகிழ்வடைந்தார். ஏழைகளை மகிழ்விப்பதே இவரின் பணி வாழ்வாக இருந்தது.

**குடில் - ஆண்டவரின் பிறப்பு மனிதருக்கு மட்டுமல்ல அனைத்திற்குமுரியது.**




பிரான்சிஸ் அசிசியார் இயற்கையோடு இணைந்து வாழ்பவர். இவர் கிறிஸ்துவின் பிறப்பு மனிதருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் உரியது என்பதை வெளிப்படுத்த குடிலினை அமைத்து விலங்குகளையும் தொடர்புபடுத்தினார்.

**கிறிஸ்மஸ் மரம் - செழிப்பான நிலை**



கிறிஸ்து பிறப்புக் காலத்தில் மரங்களில் இலைகள் உதிர்ந்து பனி மூடி காணப்படுகின்ற வேளை சைப்பிரஸ் மரம் பச்சையாக செழிப்பாக காணப்படும். இதனால் அம்மரத்தில் ஒளிகளை ஏற்றி அலங்கரித்துக் கொண்டாடுவர்.

**வால்வெள்ளி - வழிகாட்டல்**



அதிசயமான நிகழ்வு இடம்பெறுவதை அடையாளப் படுத்தி வழிகாட்டும்.

**கிறிஸ்மஸ் கேக் - பிறருக்கு இனிமை**



பிறருக்கு இனிமை உள்ளவர்களாக, இயேசுவின் சுவை மிகுந்த இறை மக்களாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

தா.போல்றொசான்
யாழ்.புனித மடுத்தீனார் குருமடம்

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## இறைமகன் இயேசுவின் மனித அவதாரம்

எம் நாட்டுக்கும் உரிய இறைமகன் இயேசுவின் மண்ணகப் பிறப்பு வரலாறு பன்னாட்டுப் பெருஞ்சாலைகள் சந்தித்த நசரேத்து என்னும் நகரிலே தொடங்குகிறது. நசரேயன் என்று அழைக்கப்பட்ட இயேசு பெருமான் கன்னிமரியாவின் கருவிலே உருவாகவிருக்கும் மங்களச் செய்தி கபிரியேல் என்னும் வான தூதரால் கன்னிமரியாவுக்கு நசரோத்து நகரில் அறிவிக்கப்படுகிறது. (லூக்கா 1 : 26-38)

வானகம் மகிழ்ந்தது!
வையகம் மகிழ்ந்தது!
மானுடம் மகிழ்ந்த்து!
வைகறை புலர்ந்தது!
உருவில்லான் உருவாகி
உலகில் ஒரு மகனுதிப்பக்.
கருவில்லாக் கருத்தாங்கிக்
கன்னித்தாய் ஆயினையே!...
(வீரமாமுனிவர்)

"புல்லணையில் மன்னவன்"
(லூக் 2:1-20)

காலம் கனிந்தது. கடவுளின் கருணை விழி மலர்ந்தது கன்னியின் கருவில் இறைவனின் திருமகனார் முழு உருப் பெற்றார். மண்ணுலகில் விண்ணக வேந்தன் பிறக்கும் நேரம் நெருங்கி வந்தது. அக்காலத்தில் ஒவ்வொரு குடும்பமும் தங்களின் சொந்த ஊருக்குச் சென்று குடிக்கணக்கு செய்து கொள்ளுமாறு உரோமைப் பேரரசன் கட்டளை இட்டான். அதற்கு இணங்க சூசையப்பர் நிறைமாதக் கர்ப்பவதி மரியாவை அழைத்துக் கொண்டு தாம் பிறந்த ஊராகிய பெத்தலகேமுக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் அங்குவந்து சேர்ந்த பொழுது ஊரெல்லாம் ஒரே கூட்டம், தெருவெல்லாம் ஒரே ஆட்டம். வீடுகள் எல்லாம் ஒரே அமளி. சூசையப்பர் தனது மனைவிக்காக வீடு வீடாக ஏறி இறங்கினார். எவரும் பொறுப் பேற்றுக் கொள்ளவில்லை.



மேலும் யாருக்குமே மரியா மெசியாவின் தாயார் என்பது தெரியாது. ஆயினும் சற்று இளகிய மனம் கொண்ட ஒருவர் அவர்களை ஊருக்கு வெளியே இருந்த ஒரு மாட்டுத் தொழுவத்திற்கு அழைத்துச் சென்றார். மழை நேரத்தில் ஒதுங்குவதற்காக மலையில் இயற்கையால் அமைந்துள்ள குகை அது. குப்பையும் கூழமுமாய்க் கிடந்த அந்த இடத்தை சூசையப்பர் சற்று சுத்தம் செய்தார். நள்ளிரவு வேளை. உலகம் எல்லாம் ஒளிதரும் வண்ணம்.

இதோ பாலகன் பிறக்கின்றார். ஏழையரெல்லாம், செல்வந்தர்கள் ஆகும் வண்ணம் உலகின் தலைவர், எதுவுமே இல்லாதவராகப் பிறக்கின்றார். மானிடரெல்லாம், இறைவனின் பிள்ளைகள் ஆகும் வண்ணம், இறைவனின் ஒரே மகன் நம் வீட்டுப்பிள்ளையாகப் பிறக்கின்றார். குழந்தை இயேசுவுக்கு வானமே கூரை. வாடையே போர்வை. வைக்கோலே பஞ்சணை. தீவனத் தொட்டியே தொட்டில். தாயாரை ஏற்றிவந்த கழுதையும், அங்கு தனியாக ஒதுங்கி நின்ற பசுவுமே அவருக்குத் தோழர்கள். விந்தையான இனிமை வரலாறு காணாத ஒரு திருப்பம். கிறிஸ்துவுக்கு முன் (கி.மு) கிறிஸ்துவுக்கு பின் (கி.பி) என்று வரலாற்றுச் சரித்திரத்தை இரண்டு காண்டமாகப் பிரிக்கும் பொன்னாள். கடவுள் நம்மோடு இருக்கின்றார் (இம்மானுவேல்) என்பதை ஏழையரும், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோரும், ஒடுக்கப்பட்டோரும் உணர்ந்து மகிழும் நன்னாள்.

அதேநேரத்தில் ஊருக்கு வெளியே இடையர்கள் சாமக்காவல் காத்துக் கொண்டிருந்தனர். அக்காலச் சூழ்நிலையில் இடையர்கள் வெறும் மடையர்களாகக் கணிக்கபட்டவர்கள். சொந்த வீடோ, காணி நிலமோ இல்லாது நாளுக்கொரு ஊர், மாதத்திற்கு ஒரு நாடு என அலைந்து திரிந்தவர்கள். சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றாதவர்கள். வேற்று இனத்தாரோடு தொடர்பு கொண்டு தீட்டுப்பட்டவர்கள். அதேவேளை இவர்களுக்கு ஏழையாகப் பிறந்தவரை. காணாமல் போன ஆடுகளைத் தேடி வந்த நல்லாயனை, அடியார்களைத் தேடி வந்த தெய்வத்தை முதன் முதலாகக் கண்டுகளிக்கும் பேரின்பவரம் அருளப்பட்டது.

ஒளியின் நடுவே வான தூதன் அந்த இடையர்கள் மத்தியில் தோன்றி, "அஞ்ச வேண்டாம். மக்களுக்கெல்லாம் மாபெரும் நற்செய்தியை அறிவிக்கின்றேன். உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அந்தக் குழந்தை ஊருக்கு அருகே அமைந்துள்ள குகை ஒன்றில் மாட்டு தொழுவத்தில் கந்தைத் துணிகளால் பொதிந்து கிடக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" என்றார். உடனே வானிலே தூதர் குழு ஒன்று தோன்றி "விண்ணகத்தில் இறைவனுக்கு மாட்சி. மண்ணகத்தில் இறையருள் பெற்றார்க்கு மிகுநலம்" என்று பாடி மகிழ்ந்தார்கள். உடனே இடையர்கள் அனைவரும், ஆயன் குரல் கேட்ட ஆடுகளெனக் குழந்தை இயேசு பிறந்திருந்த குகைக்கு விரைந்து சென்றார்கள். புல்லணையில் படுத்திருந்து குழந்தையாய் ஒளிவீசிக் கொண்டிருக்கும் தேவாதி தேவன் இயேசுவைக் கண்டு மகிழ்ந்து தம்மிடம் இருந்த பால், வெண்ணெய், பாற்கட்டி, பழங்கள் ஆகியவற்றை காணிக்கையாக்கி, குழந்தை இயேசுவின் பாதத்தை முத்தமிட்டுத் திரும்பினர்.

ஒளி, உதித்தது– கலி தொலைந்தது
வழி பிறந்தது – விழி திறந்தது
வரம் பலித்தது– அறம் பிழைத்தது
அருள் மலர்ந்தது– நெறி தவழ்ந்தது

மேய்ப்பரை. மேய்ப்பர் கண்டார்
மேலோரின் ஒளியைத் கண்டார்
தூயவரை இடையர் கண்டார்
தொல்புகழ் விளங்கப் பெற்றார்.

வன்னிவாழ் இதயம்
ம.ஆசைமுத்து

துல்லிய பட்டுப் போன்ற
தூயவன் மரியாள் கையில்
மெல்லிய பாலன் இயேசு
விளக்கெனப் புன்னகைத்தான்
நல்லவர் உள்ளம் போல
நலம்பெறப் பிறந்த செல்வன்
இல்லை என்னாதவாறு
இருகரம் விரித்து நின்றான்
"இயேசு காவியம்"



இக்கால மக்கள் கிறிஸ்மஸ் விழாவை பெரிதும் விரும்பி ஆடம்பரமாகக் கொண்டாடுகிறார்களே அன்றி அதன் உள்ளார்ந்த அர்த்தத்தைக் காண ஆர்வம் காட்டுவதில்லை. எங்கும் வர்ண விளக்குகள், கிறிஸ்மஸ் தாத்தாக்கள், வாழ்த்துச் செய்திகள், தொலைக்காட்சிகளில் வரும் விளம்பரங்கள், அழகிய கேக்குகள், அழகிய வாழ்த்து அட்டைகள், பலவர்ண ஆடைகள், அலங்கார உடுப்புகள், இவ்வாறே இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்மஸைக் கொண்டாடி மகிழ்கிறோம். உண்மையான கிறிஸ்மஸ் மறைந்து விடுகிறது. அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் என்றால் என்ன? ஒரு கவிதை நினைவிற்கு வருகின்றது.

## "பிறந்தார் பாலன் பாரெல்லாம் மகிழ"

கலாபூஷணம் புலவர் அரியநாயகம் J.P

"குளிர்விட்டுப் போன மனிதர் நடுவில்
குளிரில் நடுங்கி நீ பிறந்தாய்
அன்று உனக்காகக் காத்திருந்தது
பக்த கோடிகள் அல்ல
ஊரக் கோடியும் ஓலை குடிசையும்தான்
அன்று நீ யாரென்று தெரியாததால்
உன் பிறந்த நாளை உலகம்
கொண்டாடவில்லை
இன்றோ, அதைக் கொண்டாடும் அவசரத்தில்
உன்னை நினைப்பதற்கே மனிதனுக்கு நேரமில்லை"

இந்தக் கருத்துத்தான் இன்றைய மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. பலவேளைகளில் உலக இன்பங்களும் வெளித்தோற்றக் கவர்ச்சிகளுமே உண்மை என்று நினைத்து நம்மையே நாம் மறக்கின்றோம். தந்தை கடவுள் நம் அனைவரின் மீது அன்பு கொண்டு நம் பாவங்களுக்காக தனது அன்பார்ந்த மகனை இவ்வுலகிற்கு அளித்தார். இயேசுவும் இவ்வுலகில் பிறந்து தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினார்.

இயேசு பிறந்த "பெத்தலகேம்" என்ற ஊருக்கே 'அப்பத்தின் வீடு' என்பதே பொருள். உலகின் உணவாய் வந்த இயேசு இங்கே தான் பிறந்தார். அவர்கள் அங்கு இருந்தபோது மரியாவிற்குப் பேறு காலம் வந்தது. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினர். (லூக் 2:6-7)

தொழுவத்தில் இருக்கும் ஆடு, மாடுகளுக்கு உணவளிக்கப் பயன்படும் தீவனத் தொட்டியில் இயேசு கிடத்தப்பட்டதும் ஒரு முன்னடையாளமே. ஏனெனில் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே (யேவா 6:41) என்று கூறிய இயேசு பிறக்கும் போதே உணவு வழங்கப்படும் தீவனத் தொட்டியைத் தேர்ந்தெடுத்தார்.

கிறிஸ்து பிறந்த நாளன்று வானதூதர்கள் இடையர்களுக்குக் கொடுத்தமுதல் செய்தி - "அஞ்சாதீர்கள், இதோ! எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். 'இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். (லூக் 2:10. 11) ஆம் உலகில் எங்கு பார்த்தாலும் வன்முறைகளும், கொலைகளும், கொள்ளைகளும், துப்பாக்கிச் சூடும், வாள்வெட்டுகளும் நம்மக்களின் உள்ளங்களையும், குடும்பங்களையும் தாக்கிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நம் ஆண்டவராகிய இயேசு பிறந்திருக்கின்ற கிறிஸ்மஸ் விழாவை நாம் கொண்டாடுகின்றோம்.

நாம் இதுவரை எத்தனை கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடி இருப்போம். நம்முடைய நடை, உடை, உணர்வுகளில் நிறைய மாற்றத்தைச் செய்திருப்போம். ஆனால் நம் உள்ளத்தில் ஏதாவது மாற்றம் செய்திருக்கின்றோமா என்றால் இல்லவே இல்லை. அப்படியே தான் இருக்கின்றோம்.

பாவிகளை மீட்க இயேசு இவ்வுலகிற்கு வந்தார். (1தீமோத் 1:15) ஆண்டவர் இயேசு வந்து பாவிகளாகிய நம் பாவங்களை அவருடைய இரத்தத்தாலே கழுவி நம்மை மீட்டுக் கொண்டார். ஆனால் இன்று நாம் அந்த கழுவப்பட்ட நிலையில் இருக்கின்றோமா? நம் இயேசு நம் உள்ளத்தில், இல்லத்தில் தங்கியிருக்கின்றாரா? இல்லை வெறுப்புக்களும், பாவ எண்ணங்களும், சிந்தனைகளும், கசப்புகளும், உலகக் கவலைகளும், நிறைந்திருக்கின்றதா? நம் நிலையைச் சிந்தித்துப் பார்த்து, நம்மிடம் இருக்கும் பாவங்களை அறிக்கையிட்டு பாலன் இயேசு நம் உள்ளத்தில் தங்க இடம் கொடுப்போம். அவரே நம்முடைய பாவ இருளை அகற்றி நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் மனமகிழ்ச்சியையும், சந்தோசத்தையும், சமாதானத்தையும் தந்தருள்வார்.

"அஞ்சாதே நான் உன்னோடு இருக்கிறேன். கலங்காதே நான் உன் கடவுள். நான் உனக்கு வலிமை அளிப்பேன். உதவி செய்வேன் என் நீதியின் வலக் கரத்தால் உன்னைத் தாங்குவேன்" (எசாயா 41:10)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து விண்ணக இன்பத்தைத் துறந்து இந்தப் பூமியிலே ஏழையாகப் பிறந்து தனக்கென்று எதனையும் வைத்திராமல் அவருடைய ஆவி, ஆன்மா, சரீரம் முழுவதையும் நமக்காகக் கையளித்தார். அந்தத் தியாகம் நிறைந்த அன்பு இயேசுவைப் பின்பற்றும் நாமும் சுமைகளால் சோர்ந்திருக்கும் உள்ளங்களுக்கும், வறுமையால் வாடிநிற்கும் ஏழைகளுக்கும், அன்புக்காக ஏங்கி நிற்கும் எளியோர்க்கும் நம் இதயத்திலிருந்து அன்பையும், நம்முடைய கரங்களிலிருந்து உதவிகளையும், நம் நாவிலிருந்து இனிய சொற்களையும், நமது கண்களிலிருந்து கருணையையும் காட்டுவோமென்றால் நிச்சயமாக இயேசு நம் உள்ளத்திலும், இல்லத்திலும் பிறப்பார்.

**இந்தக் கிறிஸ்மஸ் நன்நாளிலே நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்போம்.**

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## ஒளி

குளிர்காலம் தொட்ங்கிட்ட -அன்று
விண்மீன் ஒளிர்ந்தது வானில் - அந்த
ஒளி கண்டு இடையர்கள் ஆர்வமுற
வலுவூட்டினீர் வானதூதர் மூலம்
இடையர்கள் வாழ்த்தி செல்ல - பின் தொடர்ந்தனர்
ஞானிகள் பரிசு கொண்டு
தங்களின் ஒளியை வாழ்த்தி வணங்க..!
மீண்டும் ஒரு ஒளி ஒளிர்ந்தது - எம் வாழ்வில்
அந்த ஒளியை அணைத்துவிட்டோம் - என்று
ஏங்குகின்றோம் பதறுகின்றோம் வருந்துகின்றோம் - எம்
ஒளி விளக்கைப் பார்த்து கேட்கின்றோம் மீண்டும் வா - என்று
குட்டி ஒளியே எழுந்து வா-உன்
ஒளியை வீசி எம்முள்ளங்களை ஒளிர்விக்க வா
நான் நாம் ஒளியை ஓடித்தேட எழுந்துவா
வழிகாட்ட வா புத்துயிர் அளிக்க வா வா! வா!

அருட்சகோ.பியோ ரஞ்சித்
மொன்ரே பானோ, அம்பிட்டியா

## வால்வெள்ளியாக வழிகாட்டும் பாலகனே



பாருலகில் பாவமதில் மூழ்கியுள்ள
மானிடரின் வாழ்வில்
மாற்றங்களை ஏற்படுத்த நீரும்
அன்னைமரி உதரமதில்
மனுவுருவானீர்

வறுமையிலும் நோயிலும்
வலுவிழுந்த எம்மவர் வாழ்வில்
அருள் ஒளியாகி வழிகாட்டி
வாழ்வளிக்க வையகம் வந்தீர்

ஆடம்பர மோகத்தால் அலைமோதி
அழிவின் குழிகளை தோண்டி
ஆழத்திற்கே சென்றிட்ட மானிடரை
மீட்டெடுக்க நீரும் மனிதனாக வந்தீர்

புண்ணியன் உம் வரவால்
பூமி பொலிவுறட்டும்
துன்ப துயர் விலகியே
இன்னல்கள் அகன்றிட்டும்

மாற்றங்கள் காண விழைகின்ற
மாறுபட்ட உலகிற்கு விடுதலை வழங்கி
வால் வெள்ளியாக வழிகாட்டி நீரும்
வந்து பிறந்திடும் பாலகனே!

சேரூபன் அருள்மதி
மல்வம், உடுவில்.

## நீதியின் தளிரே வந்திடுவீர் நம் மண்ணில் விடுதலை தந்திடுவீர்

விண்ணில் வேந்தன்
மண்ணில் பிறந்த மகத்தான நாளிதுவே
மார்கழி கடும் குளிரினில்
மனங்களில் மகிழ்வு கிடைத்திட
ஒளியாய் உதித்திட்டார் உன்னத பாலகா!

வார்த்தை மனுவுருவானார் - என்றும்
நம்மிடையே குடிகொண்டார்
ஆதியில் கொடுத்த வாக்கின்
அற்புதம் மண்ணில் மலர்ந்த
மகத்தான நாளிதுவே



அடிமைத்தனமும் ஆணவமும்
அசமந்தப்போக்கும் அன்பற்ற செயல்களும்
நிறைந்த நம் மண்ணினிலே
அன்பும் அரவணைப்பும் ஆறுதலும்
மனிதநேயமும் நம் மனங்களில்
குடிகொள்ள வந்திடு பாலகா!

ஆடம்பரமும் ஆணவமும்
அநீத ஆசையும் அநீதியும் நிறைந்த
நம் மண்ணினிலே
ஆறுதலும், அரவணைப்பும்
அகிம்சையும் ஆன்மீகமும் - நம்
மனங்களில் நிலைத்திட வந்திடு பாலகா!

பகைமையும், பகட்டும் பாசாங்கும்
வெட்டும் கொத்தும் வீராப்பும், விரக்தியும்
நிறைந்த நம் மண்ணில்
கனிவும் இரக்கமும் - கருணையும்
கண்ணியமும் காருண்யமும் - நம்
மனங்களில் நிலைத்திட வந்திடு பாலகா!

பெருகும் பணமும் உழைப்பும்
உயர்வையும் தினமும் அதை - எண்ணி
வாழும் மனித மனங்களில்
உண்மையும், நேர்மையும்
உயர்ந்த நல் மன்பாங்கும்
உயர்வாகப் பெற்றிட வந்திடு பாலகா

சின்னத்திரையிலும் சினிமா மோகத்திலும்
கையடக்க தொலைபேசியிலும்
காலத்தினை வீணாக்கும் - நம்மிடையே
காலத்தின் நிலை கண்டு
கடவுளை தேட என்றும்
கனிவான உள்ளத்தினை தந்திடு பாலகாக்ஷி!

மண்ணுலகில் வாழும் எம்மிடையே
மனதாலும் நினைத்திடும் ஏற்றத்தாழ்வு
நிலைகளைக் களைந்திடவும்
நாளும் பொழுதும் நபருக்கு ஏற்ப
நாம் போடும் முகமூடி வாழ்வுதனை - களைய
உள்ளமதில் கள்ளம் கபடமற்ற - அந்த
வாழ்வுதனை வையகத்தில் வாழ்ந்திடவே
வந்திடுவாய் பாலகனே!
உம் அருளினை பொழிந்திடுவாய் பாலகனே

யே.அனுஸ்டதாஸ்
மாதகல்

## இயற்கையின் இயற்கை

தோற்றுவிக்கப்பட்டதோ அல்லது தோன்றியதோ
மதம் ஒன்று சொல்கின்றது
பகுத்தறிவு எனும் ஒன்று மற்றொன்று சொல்கின்றது
ஆய்வுகளின் முடிவுகளும் இறுதியில்
அதிசயம் தான் காட்டுகின்றன
உண்மை முடிவு நேர்கோட்டு முடிவுதேடும்
முயற்சிதான் போலும்

செவிக்கினிய குயிலிசை படைத்த இயற்கைதான்
செவியதிரும் யானைப் பிளிறலையும் தந்தது
கண்ணிற்கினிய அழகைத் தந்த இயற்கைதான்
கர்னகடூர அழிவையும் தந்தது

அன்னை திரேசாவை அன்புக்கு தந்த இயற்கையே
அழிவிற்கு இடி அமீனையும் தந்தது

புறஊதாக்கதிரை கதிரவனுக்கு வழங்கிய இயற்கையே
புவிக்கு ஓசோன் படலத்தையும் கொடுத்தது

உனக்குப் பிடிக்கும் எல்லாம் இங்கே
எனக்கும் பிடிப்பதும் இல்லை
என்னைப் பீடித்த முழுதும் இங்கே
உன்னையும் பீடித்ததும் இல்லை

கொடுக்கும் எண்ணம் கொண்டோர்க்கெல்லாம்
இயற்கை கொடுத்ததும் இல்லை
இயற்கை கொடுக்க கொடுத்த எல்லோரும்
இங்கு கொடுத்து முடித்ததும் இல்லை

இயற்கையின் சாயல் ஞானியில் உண்டு - காரணம்
அவனும் நன்மையும் தீமையும் அறவே அற்றவன்

குணமதில் கொடுக்கும் இயல்பும் எடுக்கும் இயல்பும்
இயற்கைக்கு இல்லை
இங்கு ஆக்கமும் அழிவும் மனிதனின் கணக்கு - எனில்
தருதலும் பெறுதலுமே இயற்கையின் இயற்கை



த.அன்றூட் ஜக்ஷன் (வாழ்வகம்)
சட்டபீட புகுமுக மாணவன் -
கொழும்பு பல்கலைக்கழகம்

## செய்தி வரும் எப்போ?

கடந்து வந்த பல
சகாராக்களின்
வெறுமையின் வரலாற்றுக்
கீற்றுக்குள்
வெண் புறாக்களின்
சமாதானச்
சமிக்ஞைக்காக
அன்பியக் குஞ்சுகள்
நாம்
இன்னும்
சாமக் காவல்
காத்துக் கிடக்கின்றோம்
அந்தச் செய்தி
வரும் எப்போதென்று...

ஆ.யோண் பற்றிக்
சுன்னாகம்



## ஏங்கும் இதயம்

காலம் பார்த்து காத்திருந்தோம் - எம்
பலனுக்காக விழித்திருந்தோம்
காலம் புலர்ந்து விட்டது - எம்
காதுகளில் நத்தார் கீதம் ஒலிக்கிறது

பலகாரம் சுட்டு களைத்து போய்விட்டோம் - ஆனால்
அடுத்தவர் வாழ்வை நாசமாக்கி விட்டோம்
புதுப்புது ஆடைகள் பார்த்து களைத்து போய்விட்டோம்
ஆனால் ஏழைகளை பார்க்காமல் ஒதுங்கிவிட்டோம்

அலங்கார மின்குமிழ்கள் போட்டு
அலங்கரித்தோம் - ஆனால்
மற்றவரை மட்டந்தட்டி அல்லோலப்படுத்தினோம்
பட்டாசு வெடிக்கச் செய்து மகிழ்ந்தோம் - ஆனால்
யாருமற்றவரை பார்க்க தவறி விட்டோம்

நண்பா! விழித்துப்பார் - உன்
மனதை உற்றுப்பார்
இயேசு வேறெங்கும் பிறக்கவில்லை - உன்
இதய வீட்டில் பிறக்கின்றார்

உன் வாழ்வை மாற்றி - பிறர்
வாழ்வில் ஒளியேற்று
சாதி, மத, மொழி பேதம் வேண்டாம் - எம்
வாழ்வில் இயேசு மட்டுமே வேண்டும்

பாலன் பிறக்க வேண்டும் - எம்
இதயத்தில்
குடியிருக்க
வேண்டும்
மனமகிழ
வாழ்த்துவோம்
அனைவருக்கும்
இனிய நத்தார்
வாழ்த்துக்கள்



அருட்சகோ . லெ.பிரியதர்சன் பெர்னான்டோ
மன்னார்

## துயருறுவோர் துயர் துடைப்போம்

மாதங்களில் பொன்மாத மார்கழிதனில்
மகத்தான உவகையுடன் நற்செய்தி
வானவர் உரைத்தனர் அன்று
"உங்களுக்காக மெசியா பிறந்துள்ளார்"
விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலமதாய்
பெத்தலேகேமில் பிறந்த அவர்
விடியலைத் தேடும் மானிடர்க்கு - பாவ
விடுதலை வாழ்வை உவந்தளித்தார்
மனிதமற்ற மனிதரை மனிதராக்க
கடவுள் மனிதரானார்
வேதனைகள் வேகிட
சாபங்கள் சரிந்திட
கவலைகள் களைந்திட
துயருறுவோர் துயர் துடைத்து
தூயவனை வரவேற்பதே
உண்மைக் கிறிஸ்தவனின்
உண்மைக் கிறிஸ்மஸ்

அ.ஸ்ரியான் ஜெராக்சன்
OLR பங்கு

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## மீட்பர் பிறந்திடும் குடிலாகிடு...

வானவர் உரைத்த
வாக்கிற்கு இணங்க
இதோ உமது அடிமையென
உரைத்தமரி கருவுற்றார்
உன்னதர் இயேசுவை
உலகிற்கு அளித்திட
மரிசூசை இருவரும்
இல்லிடம் தேடி அலைந்தனர்
இடமேதும் இல்லாத போதும்
சரித்திர நாயகனை
சஞ்சலம் எதுவுமின்றி
மாடடை குடிலில் பெற்றெடுக்க
தஞ்சமடைந்தனர்
தீவனத் தொட்டியொன்று
இயேசுவின் படுக்கையாயிற்று
ஆவின கூட்டம்
அவர்தம் தோழராயினர்
மூவுலகையும் ஆளும்
இறைமன்னனான பாலன்
பாரினிலே உதித்தார்
தூதர்கள் புகழ்பாடிட
பாலகர் இயேசுதன்
திருக்கர ஆசீரை பொழிந்தார்
பாவங்கள் விலகியே ஓடியது
பாரெல்லாம் ஒளியாகியது
இனி உன் மனக்குகையும்
மீட்பர் பிறந்திடும்
குடிலாக மாறிட்டும்

சேரளுபன் ஷெர்வின்
மல்வம், உடுவில்.

## பாரெங்கும் போற்றும் பாலகன்



குவிந்தன வெண்பனி குடிலுமோ குளிர்ந்தது
கூடினர் இடையரும் கரங்களும் குவிந்தன
புவிக்கோர் அரசராய் பாலகன் யேசுவும்
பொன்னிற வைக்கோலில் புதுமைகள் புரிந்தார்
செவிதனில் சேர்ந்தே செய்தியும் பரந்தன
சத்திய தேவனை சொத்தென கண்டனர்
கவின்கலை நிறைந்த கண்களும் ஒளிர்ந்தன
கரங்களை குவித்து கணமெலாம் வணங்கிடுவோம்.

"கலைமாமணி"
கே.ஆர். திருத்துவராஜா.

## நாமாவோம்...

கைககள் இழந்து தவிப்போர்க்கு
காக்கும் கரங்கள் நாமாவோம்
கால்கள் இன்றித் தவிப்போர்க்கு
ஊன்றுகோலும் நாமாவோம்

பார்க்கும் கண்கள் இழந்தோர்க்கு
பாரில் விழிகள் நாமாவோம்
கேட்கும் செவிகள் இழந்தோர்க்கு
கேள்வி ஞானம் நாமாவோம்

பேசும் திறன்கள் இழந்தோர்க்கு
பேச்சும் மொழியும் நாமாவோம்
உறவை இழந்து தவிப்போர்க்கு
கூடி மகிழும் உறவாவோம்...

அருட்பணி. ஏ. அன்புராசா அமதி

## கடவுளுக்கு காவலா...

அகவைகள் பல கடந்திடினும் வீரத்தலைவனை இழந்திடினும்
நம்மவர்க்காய் கவிதைகள் எழுதி ஓய்ந்த கரங்களும்
வலுவிழந்த எம் குரல்களின் தொனிகளும்
திருஅவைத் தாயிற்காக மறுமுறை விசனப்பட- கவலை
கண்ணில் தெரியுதடி கண்ணம்மா
கடவுளுக்கே காவல் கொடுத்ததற்காய்...



கொன்றாலும் குரல் எழுப்பாக் கூட்டம் என்பதை
அறிந்தான் ஒருவன்
திங்களின் ஞாயிறுகளை கடவுள் எனக்
கழிப்பான் எனவும் அறிந்திருந்தான் இன்னொருவன்
மீட்பின் நாளை கறைபடிய எத்தனித்தான் ஒருவன்
எண்ணியதை கல் மனம் இழகா வண்ணம்
முடித்துவிட்டான் இன்னொருவன்
அறிந்தோ அறியாமலோ இயேசுவை உச்சரித்த நாவுகளை
பரலோகம் அடையத் துடிக்கும் ஆத்துமாக்களை
அதன் இலக்கை அடைய உதவிட்டான் அவன் - கவலை
கண்ணில் தெரியுதடி கண்ணம்மா - உறவுகளை
இழந்துவிட்டோமே என்பதற்காய்...

ஏழு திங்கள்கள் கடந்த போதிலும்
கருவறைகள் காவல் நிலையங்களாகவும்
கர்ப்பப்பீடங்கள் சோதனைச் சாவடிகளாகவும்
ஆலயம் நோக்கிக் காவலர்களும்,
ஆலய முன்றலில் வான்படையும்
வானதூதர்கள் போல் இராணுவம் இருபுறமும்
பரம் பொருளுக்கே காவலாம்!
எத்தனை சத்திராதிகள் வந்தாலும்
கலாபனைகள் போலவே தோன்றிவிட்டாலும்
கடவுளுக்கு காவல் வழங்கிக் கொண்டு
இறைபிள்ளைகளாய் வாழ கண்ணில் திமிர் சொறியுதடி
கண்ணம்மா... கிறிஸ்து தாசன் என்பதற்காய்...

ச.டெல்சன்
மெய்யியல் பீடம், கண்டி

## துயர் துடைக்கும் தூயவனாய்....

அகிலம் அனைத்தையும் உம் அருட்கரத்தில்
முகில் போன்ற மென்மையாய்த் தாங்கிய பாலா
துயில் இன்றித் தரணியோர் வளமுற வாழவே
துகில் தனில் மாடடைக் குடிலில் மலர்ந்தவனே!

விண்ணகத்தோர் மகிழ்ச்சிக் கானம் முழங்க
கண்ணயராக் காத்திடும் ஆயரும் வணங்க
தண்ணொளி கண்ட ஞானவேந்தரும் போற்ற
மண்ணகத்தோர் துயர் நீக்க மன்னவா நீ பிறந்தாயோ?

துயருற்றோர்க்கு ஆறுதலும் நல்மனத்தோர்க்கு அமைதியும்
அயர்வுற்றோருக்கு தேறுதலும் கல்மனத்தோர்க்கு கனிவும்
நிர்க்கதியானோரின் நம்பிக்கையும்
சிறையுற்றோரின் விடுதலையுமாகி
திக்கெட்டும் மாந்தர் தலைநிமிர்ந்து வாழ நீ மீட்பனானாயோ?

இஸ்ராயேல் குல எதிர்பார்ப்பின் விடிவெள்ளியே
இலங்கையரெம் எதிர்நோக்கிலும் தோன்றிடாயோ?
ஆராதித்தே அழைக்கின்றோம் அடிமைத்தளைகள் அகற்றிட
ஆள்பவர் நெஞ்சினிலும் ஆதிக்கமகற்றும் நீதிக் கோலாகாயோ?

போர்களும் பூசல்களும் பூமியில் ஓயவில்லை
ஊர்களை உலுப்பும் போதையும் மாயவில்லை
தேராகும் வாகனப் பவனித் தலைமைகளிலும் மாற்றமில்லை
வேரறுந்த மரமாகும் மாந்தர் வாழ்வில் உயிராகும் தளிராகாயோ?

ஈன்ற உதரங்களும் இருகரம் அணைத்த சோதரங்களும்
ஈரவிழி உலர்த்தி உரிமை வாழ்வடைவது எப்போ?
முரசிலும் மேலோங்கும் கவனயீர்ப்புக் குரல்கள் தணியவே
அரசர்க்கு நீதித் தீர்ப்பு வழங்கும் ஆற்றலாய் நீ ஒளிராயோ?

தேர்தல் முழக்கங்களோ அநீதியின் களங்களாயின
நேர்மையுடன் போராடும் உள்ளங்கள் ஊமைகளாயின
காணாமல் ஆக்கப்பட்டோர், காணிகள் அற்றோர்
வீணாக வருந்தி மடியும் காலம் ஒழிக்க நீ உதித்திடாயோ?

துயரங்கள் தொடர் நாடகமாகும் வாழ்வியல் மறைய
பயங்கரங்கள் தொடரா மனிதநேயம் மனங்களில் நிறைய
காரிருளின் மக்களுக்குப் பேரொளியாய் தோன்றிய பாலகா!
பேரிடரில் வாழும் மக்களின் விடுதலைச் சுடரே நீ ஒளிர்ந்திடுவாய்

பரம தந்தையின் ஏக மகனாய் மலர்ந்த தெய்வபாலா!
பாருலகோர் துயர் துடைக்கும் தூயவனாய்
எழுந்தருள்க எம்
உள்ளத்திலும் உலகிலும்!

S.M.வுளோறன்ஸ்
(இளவாலை)

## எண்ணிப்பார்...

அஞ்சாதே! அதிதூதரின் நற்செய்தி
அகிலமே திரும்பிப் பார்க்க பிறந்த
பாலன் நித்திய வாழ்வின் வேந்தன்
எமக்கு ஒளிமயமான
எதிர்காலமல்லவா?

நீதியின் வலக்கரம் வறியோன் நிலை
உயர்ந்தது எமக்கும் தந்த பாடம்
தன் நம்பிக்கையை
வலுவூட்டியது அல்லவா?

சிந்திக்காத துஷ்டன் - சிரசு தனக்குள்
சிகரமென சிந்தையில் மமதை
சிசுவினால் சிதைந்தது
சரித்திரமே சரிந்தது
மழலைக்கு அஞ்சிய மணிமகுடம்
குழந்தையின் குருதி குடிக்க
கும்மாளம் போட்ட அரக்கன் கதி..?
யானைக்கும் அடி சறுக்குமாம்
ஆன்மீகமில்லாத வாழ்வில்
நீ நடந்தால்.
எண்ணிப்பார்...

S.B.பீற்றர் போல்
யாழ்ப்பாணம்

## உம் திருச்சபை வெற்றிபெற வந்திடுக

மானிடமகனே! மீண்டும் உமது பிறப்பு விழா!
நீரே உண்மை! நீரே சத்தியம் நீரே எமது ஆற்றல்!
நீரே பேரன்பு! நீரே பேரிரக்கம்! நீரே பெரும் சக்தி!
இவ் வையம் எல்லாம் சொந்தமென உறுதிப்படுத்துபவரும் நீரே!



எம் குற்றங்களுக்காக மானிடக் குழந்தையாக எமை மீட்க
இவ்வுலகிற்கு வந்த இறைமகனே உமது ஆட்சி வருக! மலர்க!
எமது மானிட அரசின் மாற்றம், எமை அதிர்ச்சிக்குள்ளானதே!
விண்ணக மண்ணக அரசராம் உம் ஆட்சியில்
முழுவதும் சரணடைந்தோம்

ஏப்பிரல் 21 உயிர்ப்பு ஞாயிறு கொச்சிக்கடை புனித அந்தோனியார்
ஆலயமதில் உயிர்ப்பு விழாத் திருப்பலி காணச் சென்ற பக்தர்கள் மேல்
மிலேச்சத் தனமான குண்டு வீசி இரத்தக் களரியாக்கியதே!
இக் கொரூர சம்பவத்தால் நல்லோர் சோகத்தில் வாழ்ந்தனரே!

தம் இன்னுயிர்களை ஈந்து உம்மை மகிமைப்படுத்தியதால்
அத்தத் துயர நாள் தொடக்கம் இன்று வரையும்
உயிர்ப்பு ஞாயிறு நடைபெற்ற சம்பவம் எனத் தினம் தினம்
பத்திரிகைகள் ஊடகங்கள் வாயிலாக உலகம் முழுவதுமே உமது
உயிர்ப்பை உறுதிப்படுத்துகின்றதே!

உம்மைக் குழந்தையாகக் கரங்களில் ஏந்தி மகிழ்வுற்ற
புனித அந்தோனியார், உண்மைக் குற்றவாளிகளைக் காட்டிக்கொடுத்தார்!
கத்தோலிக்க ஆலயங்களில் சில நாட்கள் திருப்பலிகளின்றி பூட்டப்பட்டு,
மீண்டும் திறக்க வைத்து குருக்கள் திருப்பலி நிறைவேற்றிட
உமது மாட்சியை வெளிப்படுத்தினீர்!

நாட்டில் நடக்கும் அநீதிகள் அட்டூழியங்கள் தான் எத்தனை!
கற்பழிப்பு, கடத்தல், கொலை, கொள்ளை, எயிட்ஸ் நோயின் தீவிரம்
போதைப்பொருள் பாவித்தல் இளைஞர் சிலரின் சீர்கேடுகள்
இச் செயல்களால் யாம் திருச்சபை மிகத் துன்புறுகிறதே!
மாசுமறுவற்ற திருக்குமரா இம்மாசுகளகற்றிட வந்திடுவாய்!

கல்லான இதயங்களைக் கனிவுள்ள இதயங்களாக மாற்றிடவாரும்!
உம் திருச்சபைக்கு வெற்றிகளை வழங்கிடவே வாரும் ஐயா!
அமைதியையும் சமதர்மத்தையும் உண்மையையும் நிலைநாட்ட வாரும்
தூய்மை நிலை செபவீரர்கள் அதிகரித்திடவே வாரும்!

கன்னி மரி பெற்றெடுத்த இறைவனும் மனிதனுமான திருப்பாலா!
காரிருள் போக்கி எங்கும் பேரொளி ஏற்றிடவே வாரும்!
சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்! அவர்களைத் தடைசெய்யாதீர்!
என மொழிந்தவரே! பெற்றோர் தம்பிள்ளைகளை
உம்மிடம் நெருங்கிவரச் செய் பார்போற்றும் கன்னிமரி பாலகனே!
மீண்டும் பிறப்பு விழாவில் வந்திடுக!

திருமதி.மரியம்மா செபஸ்தியாம்பிள்ளை
ஓய்வுநிலை ஆசிரியை- உடுவில்.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# கடைசியாக முகம் பார்ப்பவர்கள்



அருட்பணி
பெரியவிளான் அஜந்தன்

'வெள்ளையர்' என்றுதான் என் பெரியப்பாவை எல்லோரும் அழைப்பார்கள். அழகன். அடர்த்தியான தன் நரைத்த மீசையை முறுக்கி விட்டிருப்பார். பார்ப்பதற்கு நத்தார் பாப்பா போல வடிவாயிருக்கும். கண்ணில் ஒருமுறை சத்திர சிகிச்சை செய்த பிறகு கறுத்தக் கண்ணாடி போட்டிருப்பார். முற்றத்து வேப்பம் மரத் தடியில் பேரப்பிள்ளைகளோடு மாபிள் அடித்து விளையாடும் போது அவரது சாரத்தை பிடித்து இழுத்தாலோ, பனங் குற்றியிலில் இருந்து பின்னேரம் சுருட்டுப் பத்தும் போது சுருட்டைப் பறித்துக்கொண் டோடும் கடைசிப் பேத்தியிடமோ. படுத்திருக்கும் போது மீசையைப் பிடித்திழுக்கும் மகனிடமோ அவர் கோபப்பட்டதே இல்லை. இதனால் தான் நிலவைச் சுற்றிச் சுற்றி மொய்த்துக் கிடக்கும் நட்சத்திரங்களைப் போல அவரைச் சூழ மனிதர்கள் சிரித்துக் கொண்டும். பேசிக்கொண்டும் இருப்பார்கள். பெரியப்பா என் நெஞ்சுக்கு நெருக்கமான மனிதன். சில மாதங்களுக்கு முன் பெரியப்பா இறந்து போனார். பிள்ளைகள் அழுதார்கள். சகோதரங்கள் அழுதார்கள். "நாங்கள் இனி யாரோட விளையாடுறது. எங்களை விட்டுட்டு போகாதிங்கோ" என்று பேரப்பிள்ளைகள் தங்கள் விளையாட்டுத் தோழன் இறந்தது போல அவரின் விரல் பிடித்து அழுதார்கள்.

என் கண்களில் கண்ணீர் ஒழுகிக் கொண்டிருக்க என்னைப் பார்ப்பதற்கு அவர் வரும் சைக்கிள் வேலியோரம் தெரிந்தது. இறுதித் திருப்பலி முடிந்து நல் அடக்கத்திற்காக சேமக்காலைக்கு உடலை எடுத்துச் சென்றார்கள். புதைப்பதற்காக வெட்டப்பட்ட கிடங்கின் அருகே குவித்துக் கிடந்த மணபிட்டியில் அவரது சவப்பெட்டியைத் திறந்து வைக்கிறார்கள். என் கால்களில் பட்டு சில தொட்டாற் சுருங்கி இலைகள் பட்டென்று மூடிக்கொள்ள பெரியப்பாவின் முகம் தெரியும் தூரத்தில் நிற்கின்றேன். இறுதிச் செபங்கள் சில சொல்லி முடிக்கப்பட்டன. அறுந்து கொண்டிருக்கும் வாழ்வின் மீதான நம்பிக்கைகளை இழுத்துக் கட்டுவதற்கு செபத்தை விட சிறந்த கயிறு வேறு எதுவாகத்தான் இருந்துவிட முடியும்.

அந்தக் கூட்டத்தில் தன் சாரத்தை வழக்கத்தைவிட சற்று மேலாகவே உயர்த்திக்கட்டிய ஒருவர், வெற்றிலை பாக்குப் போட்டுத் துப்பிய தன் வாயை புறங்கையால் துடைத்தபடி சத்தமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். "கடைசியாக முகம் பாக்கிறாக்கள் பாருங்கோ". எனக்கு நெஞ்சுக்குள் ஏதோ வந்து அடைத்தது. இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. கடைசியாக முகம் பாக்கிறதென்றால் என்ன? இனி இந்த முகத்தை ஒருபோதும் பார்க்கமுடியாதா? என் விடுமுறை நாட்களில் என்னைப் பார்ப்பதற்காக சைக்கிளில் வந்து என்னைக் கட்டி அணைத்து தன் மீசை மயிர்கள் குத்தக் குத்த என்னை முத்தமிடுகிற அந்த முகத்தைப் பார்ப்பது இதுதானா கடைசிமுறை. இனி நான் ஆசைப்பட்டாலும் ஒருபோதும் பார்க்கவே முடியாதா? விறைத்துப் போய் நின்றேன்.

அப்போதுதான் நினைத்துக்கொண்டேன். புதைப்பதற்காக வெட்டப்பட்ட சவக் கிடங்கினருகே, குவித்துக்கிடக்கும் மண் மீது ஒரு நாள் என் சவப்பெட்டியையும் விரித்து வைப்பார்கள். என் கைகளும் கால்களும் கட்டப்பட்டிருக்கும்.

நான் எந்தச் சலனமும் இன்றி இறந்து கிடப்பேன். கூட்டத்திலிருந்து யாரோ ஒருவன் தன் வெற்றிலை பாக்குப் போட்டுத் துப்பிய வாயினை புறங்கையால் துடைத்தபடி சத்தமாகச் சொல்லிக் கொண்டிருப்பான். "கடைசியா முகம் பாக்கிறாக்கள் பாருங்கோ".

உங்களுடைய முகத்தை யாரோ சிலர் கடைசியாகப் பார்க்கும் நாள் வரத்தானே வேண்டும். அந்த நாள் எப்பொழுது என்று உங்களுக்கும் தெரியாது. ஆனால் நிச்சயம் வரமால் போகாது என்பது மட்டும் உறுதியாகத் தெரியும்.

நாட்களும் மாதங்களும் வருடங்களும் நாட்காட்டித் தாள்களைப் போல கிழிக்கப்பட்டு தூரத் தூரவாய் எறியப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. நாங்களும் செக்குமாடுகளைப் போல ஒரே மாதிரியான சக்கை வாழ்க்கையை வாழ்ந்துகொண்டே இருக்கின்றோம். கால்களில் தீப்பிடித்த மனிதர்களாக நிற்க நேரமின்றி ஓடித்திரிகின்றோம். 'அறிவிலியே! இன்று இரவே உன் உயிர் உன்னைவிட்டுப் போய்விடும். அப்போது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்'. வாழ்க்கையைப் பிடித்தபடி வாழாமல் யார் யாரையோ திருப்திப்படுத்த போலியாக நடித்துவிட்டு, வாழ்வின் கடைசியில் திரும்பிப் பார். நீ வாழாமல் தொலைத்த வாழ்க்கை ஏமாற்ற மூட்டையாய், பெரும் கண்ணீர்த் துளியாய் உன் கண்முன் விரிந்து கிடக்கும்.

வாழ்க்கை ஒரே ஒருமுறை கிடைக்கிற வரம். இப்போது திடீரென உங்கள் நெஞ்சுக்குள் ஏதோ செய்கிறது. மூச்சு முட்டுகிறது. வைத்தியசாலையில் உங்களைச் சோதித்த வைத்தியர் சொல்கிறார். "மன்னிக்க வேண்டும் இந்த நோய்க்கு மருந்தே இல்லை. இன்னும் ஒரு வருடம்தான் நீங்கள் உயிரோடு இருப்பீர்கள். வைத்தியசாலையில் இருந்து நேரத்தை வீணாக்காமல் நீங்கள் உங்கள் வாழ்க்கையை ஒரு வருடம் மனசுக்குப்பிடித்தபடி சந்தோசமாக நிறைவாக வாழுங்கள்".

வாசித்தது போதும். வைத்து விட்டு எழுந்திருங்கள். கண்முன்னே தெரிகிறது - **2020** வாழத்தொடங்குங்கள். அழகாக.... சந்தோசமாக... பயனுள்ளதாக... மனசுக்குப் பிடித்தபடி...

---

சிறுகதை

# கிறிஸ்து அவர்கள்



S.ஞானேஸ்வரி
புத்தளம்.

"நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள். அவரது அன்புக்குரிய இறைமக்கள். எனவே அதற்கிசைய பரிவு. இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள்" (கொலோ 3:12)

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. அந்த வீட்டில் குடும்பத்தினர் அனைவரும் ஒன்று கூடியிருந்தனர். அவர்கள் வழக்கப்படி இயேசு பிறப்பையொட்டி மிகவும் வறுமைப்பட்ட ஒரு குடும்பத்தைத் தெரிவு செய்து அரிசி, பருப்பு, சீனி முதலான மளிகைப் பொருட்களையோ அல்லது நோயுற்றவர்கள் இருந்தால் வைத்தியச் செலவுக்கு உதவும் வகையில் பணம் கொடுத்து உதவுவதோ அவர்கள் வழக்கம்.

இந்த முறை அடுத்த தெருவில் இருக்கிற நஸீருக்குத்தான் உதவி செய்யனும். பாவம் அவன் வேலை செய்யிற கடையில பார மூட்டைகளைத் தூக்கும் போது முதுகெலும்பில் ஏதோ பிரச்சினையாம். நிமிரவே முடியாம ரொம்பவே கஷ்டப்படுறானாம்" அப்பா சொல்லிக் கொண்டே போக இதுவரையில் அப்பாவை எதிர்த்துப் பேசாத மூத்த மகள் "ஏம்பா.. யோசித்துத்தான் இந்த முடிவை எடுத்தீர்களா?.... போயும் போயும் அந்தச் சனங்களுக்கா நாம உதவி பண்றது? "என்று முறைக்க, இளைய மகள் "எங்கட ஆட்கள்ல எவ்வளவோ பேர் கஷ்டத்தோட இருக்கிறாங்க. உயிர்த்த ஞாயிறுற்றுக்கிழமை ஈவிரக்கம் இல்லாம எங்கட சனத்தைக் கொலை செய்தவங்க" அவங்களுக்கு உதவ என்னால முடியாதுப்பா.

"ஸாரிப்பா" என்று படபடத்தாள். "குடும்பம் குடும்பமாய் எத்தனை பேர் அநியாயமாய்ச் செத்தாங்க. இன்னும் துக்கமே போயில்ல. ஏம்பா... வேற ஆட்களே கிடைக்கலையா உங்களுக்கு" மகள் பொறிந்து தள்ளினாள்.

அப்பாவின் முடிவு கொதிப்பை ஏற்படுத்தியது. அவரோ பிள்ளைகளைப்பேசவிட்டுஅமைதியாக உட்கார்ந்திருந்தார்.

"எல்லாரும் பேசி முடிச்சாச்சா" ... ஒரு குறிப்பிட்ட ஆக்கள் செய்ததெல்லாம் ஒட்டுமொத்தத் தமிழர் மேலதானே சுமத்தப்பட்டது. அப்போ நாங்க பட்ட கஷ்டமெல்லாம் மறந்து போச்சா? .... அது போலத்தான் இதுவும். அப்பாவி மக்கள அவங்களோட சேர்க்கக்கூடாது" அப்பாவின் வார்த்தையில் யாரும் சமாதானம் ஆகவில்லை.

"ஸாரிப்பா". நாங்க யாரும் வரல நீங்களே பார்த்துகோங்கோ" பிள்ளைகளின் பதிலில் அப்பாவுக்குக் கோபம் வரவில்லை. ஆயினும் முடிவாக அறிவித்தார். "நான் எடுத்த முடிவு எடுத்ததுதான். ஒரு விசயத்தைப் புரிஞ்சு கொள்ளுங்க. நாம அவங்களுக்குக் கொடுக்கிறது பொருட்கள் மட்டுமல்ல. கிறிஸ்துவையும் தான். புரிஞ்சவங்க இரவு ஏழு மணிக்கு நஸீர் வீட்டுக்கு வாங்க. நான் யாரையும் வற்புறுத்தவில்லை". அப்பா பேச்சை முடித்துக் கொண்டார்.

அப்பாவின் முடிவில் யாரும் சந்தோசப்படவில்லை. ஆயினும் தந்தைக்கு கட்டுப்பட்ட பிள்ளைகள் என்பதனால் முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டு கிளம்பினார்கள்.

நெடுநெடுவென்று ஆறடி உயரத்தில். சிரித்த முகத்துடன் இருக்கும் அந்த இளைஞன் நிமிரவே முடியாமல் கூன் விழுந்தவர்களைப் போல் கைகளை முழங்காலில் ஊன்றியபடி வந்தபோது அனைவருக்கும் அழுகை வந்தது. "என்னை மறந்திட்டிங்களோன்று நெனச்சேன் ஐயா" என்று தழுதழுக்க, வேண்டா வெறுப்புடன் வந்த பிள்ளைகள் அப்பாவை முந்திக் கொண்டு நஸீரை அணைத்து ஆறுதல் கூறினர். அதைப் பார்த்த தந்தையுள்ளம் கம்பீரமாக, பெருமையுடன் மீசை முறுக்கிக் கொண்டது.

மளிகைப் பொருட்கள் அடங்கிய பெரிய பைகளையும். கிறிஸ்மஸ் கேக் முதலான தின்பண்டங்களையும் நஸீரின் மனைவியிடம் கொடுத்துவிட்டு, தன் சட்டைப் பையிலிருந்த ஐயாயிரம் ரூபா அடங்கிய கவரை வெளியில் எடுத்த அப்பாவைப் பார்த்து, "ஒரு நிமிசம் அப்பா" என்ற பிள்ளைகள் தாம் வைத்திருந்த பணத்தையும் அக்கடித உறையிலிட்டு வைத்தியச் செலவுக்கு வைச்சுக்கப்பா என்று நஸீரிடம் கொடுக்க, வழிந்தோடும் கண்ணீரோடு அவர்கள் பேச்சி வந்து நிற்க, அங்கே அந்தக் கணத்தில் இனம், மதம், பகை, வன்மம், உயர்வு, தாழ்வு என்று எல்லாவற்றையும் புறம்பே தள்ளிவிட்டு மனிதநேயம் சிலிர்த்துக் கொண்டு எழுந்து நின்றது.

விடைபெற்று வெளியே வர, வாசலில் நின்ற நஸிரின் தாயார் பக்கத்து வீட்டுப் பெண்மணியிடம் சொல்லிக் கொண்டிருந்தது அவர்கள் காதில் விழுந்தது. "நாங்க எங்கட சனங்களுக்கு மட்டும்தான் உதவி பண்ணுவம். இவங்க கிறிஸ்தவங்க பேதம் பார்க்க மாட்டாங்க".

அப்பா அர்த்தத்துடன் தன் பிள்ளைகளைத் திரும்பிப் பார்க்க, அவர்கள் புரிந்த தினுசில் தலையாட்டியபடி மகிழ்வுடன், நிறைந்த மனதுடன் தங்கள் தந்தையைப் பின் தொடர்ந்தனர்.

# இறைவனின் அற்புத பராமரிப்பு



சகோதரன்
சேவியர் ஜோசவ்

**பிரசவ வேதனை**

மறைநூலின்படி இறைவன் ஒரு திட்டத்தின் படிதான் இந்த அண்டசராசரங்களையும், அதில் ஒன்றான இவ்வுலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்தார். இறுதியாக மனிதனை ஆணும் பெண்ணுமாக தன்னுடைய சாயலில் படைத்தார். படைக்கும் முன்பே சகலமும் திட்டமிடப்பட்டுவிட்டன. சகலமும் திட்டமிட்டபடி நடந்தாலும் மனிதனின் வக்கிரபுத்தியினால் தாறுமாறான செயல்களும் நடக்கின்றன. இப்படியிருந்தாலும் ஈற்றில் இறை திட்டமே நிறைவேறும். ஏனெனில் அவரறியாமல் அணுவும் அசையாது.

நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் கிறிஸ்துவின் வழியாகத் தேர்ந்தெடுத்தார். (எபே 1:4) தம்மால் முன்பே தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் தம் மகனின் சாயலில் இருக்க வேண்டும் என்று முன்குறித்து வைத்திருக்கின்றார். தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையவர் ஆக்குகின்றார். தமக்கு ஏற்புடையோரைத் தம் மாட்சியில் பங்கு பெறச் செய்தார். (உரோ 8:29,30); அதே வேளை நல்லோர்க்கும் தீயோர்க்கும் கதிரவனை உதித்தெழச்செய்கின்றார்.

நேர்மையுள்ளோர் மீதும் நேர்மையற்றோர் மீதும் மழை பொழியச் செய்கின்றார். (மத் 5:45)கடவுள் மனிதனைப் படைத்த போது ஆசி வழங்கி பலுகிப்பெருகி மண்ணுலகை நிரப்புங்கள், அதை உங்கள் ஆற்றலுக்குட்படுத்துங்கள் என்றார். (தொ.நூல் 1:28) ஆதாமும் ஏவாளும் முதலில் பாவம் செய்தபோது கெட்ட வான தூதர்களை சபித்தது போல், இறைவன் மனிதனைச் சபிக்கவில்லை. மாறாக காரண கர்த்தாவான பாம்பைச் சபித்தார். மனிதனுக்குப் பதிலாக நிலத்தைச் சபித்தார். (தொ.நூல் 3:14-17)கடவுள் பெண்ணிடம் "உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன். வேதனையில் குழந்தைகள் பெறுவாய், ஆயினும் உன் கணவன் மீது வேட்கை கொள்வாய். அவனோ உன்னை ஆள்வான்" எனக் கூறினார். (தொ.நூல் 3:16)

கடவுள் மனிதனைப்படைத்த போது அவரின் நோக்கங்களில் ஒன்று மக்களினம் பல்கிப்பெருக வேண்டும் என்பதே. எனவே கடவுள் மகப்பேற்றில் பெண்ணிற்கு வேதனையோடு ஒரு மறை முக ஆசீர்வாதத்தையும் வைத்தார். "பிள்ளையைப் பெற்றெடுக்கும்போது தாய் தனக்குப் பேறுகாலம் வந்து விட்டதால் வேதனை அடைகிறார். ஆனால் பிள்ளையைப் பெற்றெடுத்த பின்பு உலகில் ஒரு மனித உயிர் தோன்றியுள்ளது என்னும் மகிழ்ச்சியால் தன் வேதனையை மறந்து விடுகின்றார்" என்றார் இயேசு. (யோ 16:21)

தாங்க முடியாத வேதனையுடன் தாய் பிள்ளையைப் பெறுகின்றாள். ஆனால் பிள்ளை பிறந்தவுடன் பிள்ளையின் அழு குரல் தாய்க்குக் கேட்டவுடன் தாயின் மூளையின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் "ஓப்பியம்" (Opium) போதைவஸ்து போன்றதொரு பதார்த்தம் சுரக்கின்றது. இதனால் தாய் தன் வேதனைகள் அனைத்தையும் மறக்கின்றாள். இதை இப்போது ஆங்கிலேயே மருத்துவர்கள் கண்டறிந்து விளக்கியிருக்கின்றார்கள். குழந்தையின் அழுகுரல் முக்கியம். அதுவே தாயின் மூளையில் ஒப்பியத்தைச் சுரக்கச் செய்து தாயின் வேதனையை மறக்க வைக்கின்றது.

**என்னே நம் இறைவனின் பராமரிப்பு.**

**விசுவாசம் – நம்பிக்கையின் மகத்துவம்**

ஒன்றுமில்லாமையில் இருந்து இறைவன் சகலத்தையும் சிருஷ்டித்தார் என வேதாகமம் எமக்குப் படிப்பிக்கின்றது. அதாவது தமது அளவற்ற வல்லமையினால் கடவுள் தமது வார்த்தையின் மூலம் சகலத்தையும் படைத்தார். தமது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனுக்கும் விசுவாசத்தினால் காரிய மாற்றும் வல்லமையை இறைவன் அருளியுள்ளார்.

மனிதன் மனதால் நம்பி வாயால் அறிக்கையிடும் போது காரியம் சித்தியாகும். என்பதை பழைய ஏற்பாட்டுப் புத்தகமான இணைச்சட்டம் 30:14 இல் நாம் காண்கின்றோம்.

இயேசுக்கிறிஸ்து தம் அப்போஸ்தலர்களைப் பார்த்து "உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன். எவராவது இந்த மலையைப் பார்த்து பெயர்ந்து கடலில் விழ எனத் தம் உள்ளத்தில் ஐயம் எதுவும் இன்றி நம்பிக்கையுடன் கூறினால் அவர் சொன்னவாறே நடக்கும்" என்று கூறினார். (மாற்கு 12:23) கடவுள் தமது அதீத ஞானத்தினால் மனித வாழ்வின் அச்சாணியாக நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார்.

ஆபிரகாம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார் கடவுள் அதை நீதியாகக் கருதினார். (தொ.நூல் 15:6)

கடவுள் மனிதனை வழிநடந்த, நெறிப்படுத்த, அவன் - அவள் யாரென்பதை உணர்த்த அவன் தன்னைத் தானே ஆள, விளைவுகளை உணர்த்தவும், முயற்சி உடையோர் முன்னேறவும், சோம்பித் திரிவோர் வீழ்ந்து போகவும், வாழ்வின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ளவும், இன்னும் அநேக காரணங்களுக்காக மனிதனுக்கு அருளப்பட்டது தான் ஆழ்மனது. ஒவ்வொருவருக்கும் இரு மனம் உண்டு. முதலாவது ஒருவரின் உணர்வு போன்றவை இருக்கும் செயற்படும் களமாகக் கருதப்படுவது.

இரண்டாவது ஆழ்மனம் இது பிரக்ஞைக்குப் புலப்படாமல் ஒருவரின் நடத்தையில், உணர்ச்சிகளில் வெளிப்படும் பகுதி.

நம் ஆழ்மனதினால் ஆகாத காரியமொன்றுமில்லை. ஒரு காரியத்தை ஆழ்மனது விசுவசித்தால் அது உடனேசெய்து கொடுத்துவிடும். காரியம் நல்லதோ கெட்டதோ என்று ஆழ்மனது தரம் பிரித்துப் பார்ப்பதில்லை . ஒருவன் எவ்வளவு பெரிய பிணியானாலும் ஏதோ ஒரு காரணத்துக்காக தான் குணம் பெற முடியும் என்று நம்பினால் ஆழ்மனது அதைச் செய்து கொடுக்கும். அதே போல் ஒருவர் தீயவழியிலாவது பணக்காரனாகி விடவேண்டும் என்று விரும்பி நம்பிச் செயல்பட்டால் ஆழ்மனது அதற்கும் உதவி புரியும். நல்லதோ கெட்டதோ பின் விளைவுகளுக்கு ஆழ்மனது பொறுப்பாளி அல்ல. இந்த நம்பிக்கை ஒன்றால் தான் எல்லா மதங்களுக்குள்ளும் புதுமைகள் நடக்கின்றன.

ஒருவரில் நடக்கும் சகல காரியங்களையும் ஆழ்மனது பதித்துக் கொள்ளும். ஒருவர் பேசுபவை, கேட்பவை உணர்பவை, ஏக்கங்கள், விருப்பங்கள், பெருமூச்சுக்கள், புன்னகைகள், கோபம், பயம், சோர்வு, போன்ற சகல உணர்ச்சிகளையும் ஆழ்மனது தன்னில் பதித்துக்கொள்ளும். ஒருவரது உண்மையான "நான்" ஆழ்மனதில் பதிந்துவிடும்.

நாம் சிறிது சிறிதாக நம்பிக்கையை வளர்த்து ஆழ்மனதின் மூலம் காரியம் ஆற்றவும் முடியும் என்பது ஒரு யதார்த்தமான நிலை. இதனால் தான் பல அனுமாஷ்யமான காரியங்கள் நடக்கின்றன. புதுமைகள் கைகூடி வருகின்றன.

விசுவாசத்திற்கு எதிர்ப்பதம் அவ் விசுவாசமல்ல, பயமே. விசுவாசத்தின் எதிரி இதனாலேயெ இயேசு பயப்படாதிருங்கள் என்று அடிக்கடி கூறி வந்தார். ஆழ்மனதின் செயற்பாட்டிற்கு பயம் ஒரு எதிரி என்பதை நினைவில் கொண்டு செயலாய் வேண்டும்.வாழ்க்கையின் வெற்றிதோல்விகளுக்குஅவரவரே காரணமாகின்றனர். வேறு யாரிலும் பழிபோட இடமில்லை. எமது பரலோக தகப்பன் நம்மை நாமே ஆளுவதை விரும்புகின்றார். அதேவேளை தன்படைப்புக்களை அவன் சரியாக ஆள வேண்டும் என்றும் விரும்புகின்றார்.

**அவரின் அளவிடமுடியாத அன்பின் பராமரிப்பிற்கு இதுவும் ஒரு சான்று.**

**நவீன கண்டுபிடிப்புக்கள் இறைவனைப் பறை சாற்றுகின்றன.**

இவ்வுலகம் பொய்களால் மூடப்பட்டுள்ளது. நாம் உண்மையை எமது உயிராய் நேசித்தால் ஒழிய உண்மையைக் கண்டுணர முடியாது. நாம் உண்மைக்காக எதையும் இழக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையை இழக்கக்கூடாது. ஏனெனில் உண்மையைச் சார்ந்தவர்கள் பரம தந்தையின் பிள்ளைகள் என்பதற்கு ஒரு அறிகுறி.

"உண்மையை எடுத்துரைப்பதே என்பணி, இதற்காகவே நான் பிறந்தேன். இதற்காகவே நான் இவ்வுலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும்என் குரலுக்கு செவிசாய்க்கின்றனர்." என்று இயேசுக் கிறிஸ்து பிலாத்துவின் முன் ஒரு மரண கைதியாக நின்று கொண்டே உண்மைக்குச் சாட்சியம் கொடுத்தார். (யோவான் 18:37)

ஒரு மரம் எப்பக்கம் சாய்ந்து நிற்கின்றதோ, அப்பக்கமே விழும். உண்மையை சார்ந்து நிற்பவரும் அப்படியே.

"உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத்தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தையும் உங்களுக்குத் தந்தருள்வார்". உண்மையை வெளிப்டுத்தும் தூய ஆவியானவரை உலகம் ஏற்றுக் கொள்ளாது உலகம் அவரைக் காண்பதுமில்லை, அறிவதும் இல்லை என்று இயேசு தம்திருத்தூதருக்குக் கூறினார். (யோவான் 14:16-17)

கடவுள் இவ்வுலகைப் படைத்த போது, படைப்புக்கள் அனைத்தையும் நல்லதெனக் கண்டார். படைத்த போதே இவ்வுலகிற்குத் தேவையானஅனைத்தையும் படைத்து, மனிதனின் கையில் ஒப்படைத்தார். சில்லு, மின்சாரம் தொடங்கி இன்றைய கண்டுபிடிப்புக்களுடன் இன்னும் கண்டுபிடிக்கப்படப்போகும் அனைத்துக்குமான கால்கோள் உலகத் தொடக்கத்திலேயே இட்டாயிற்று. ஏனெனில் படைப்பில் ஒழுங்கு, விதி, சட்டம் பேணப்பட்டுள்ளன. சூரியன் தான் இவ்வுலகைச் சுற்றி வருகின்றது என்ற பேதமையில் இருந்த மனிதன் உலகம் தான் சூரியனைச் சுற்றி வருகின்றது என்ற உண்மையை அறிந்து கொள்ளப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆயிற்று. அந்த உண்மையை அறிந்த போது அதை எதிர்த்த ஞானிகளும் உண்டு.

**கடவுள் அன்பின் அற்புத பராமரிப்புக்கு இதுவும் ஒரு சான்று**

கடவுள் தினமும் புதுமைகள் நடத்திக் கொண்டே இருக்கின்றார். இறைவனின் மறைமுக கரம் - பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். ஆனாலும் கண்ணுக்குப் புலப்படாத இறை பண்புகள் - அதாவது என்றும் நிலைக்கும் அவரது வல்லமையும் கடவுள் தன்மையும் - உலகப் படைப்பு முதல் அவருடைய செயல்களில் மனக்கண்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றன. மனிதன் சாக்குப்போக்குச் சொல்வதற்கு வழியில்லை. கடவுளை அறியும் வாய்ப்பிருந்தும் உலகம் கடவுளுக்குரிய மாட்சியை அவருக்கு அளிக்கவில்லை. விஞ்ஞானம் என்ற மாயையில் உலகம் மூழ்கிக் கிடக்கின்றது. விஞ்ஞானத்தில் வளர்ந்த நாடுகள் எல்லாம் தங்களை ஞானிகள் என்று எண்ணிக் கொள்ளும் மடையர்களே. ஏனெனில் இவர்கள் இயேசுக் கிறிஸ்துவையும் அறியவில்லை பரிசுத்த ஆவியானவரையும் அறியவில்லை .ஆனால் பரிசுத்த ஆவியால் இயக்கப்படுபவர்கள் இந்த இறை பராமரிப்பின் ஊடாகப் பரமதந்தையை அறிந்து கொள் வார்கள். அவர்கள் பரமதந்தைக்குரிய கனத்தைக் கொடுக்கத் தவற மாட்டார்கள் ஏனெனில் அவர்கள் உண்மையின் வழி நடப்பவர்கள். இவர்கள் பரம தந்தையினால் உலகத் தொடக்கத்திலேயே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். உலகம் இவர்களை அறியாது. இவர்கள் உலகத்தால் துன்புறுத்தப்படுகின்றார்கள், பழிச்சொல்லுக்கும் ஆளாகின்றார்கள்.தேர்ந்து கொள்ளப்பட்ட இறையடியார்கள் தினமும் சிலுவை சுமந்துதான் இயேசுவின் சாயலைப் பெற வேண்டுமென்பதே பரமபிதாவின் எதிர்பார்ப்பு

**அப்பா உமக்கு நன்றி**
**கிறிஸ்துவே உமக்குப் புகழ்**

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# உனக்கு இப்படியும் ஒரு கடிதம்



அருட்பணி.மா.றேஜிஸ் இராசநாயகம்

**அன்பு மகனே! மகளே!**

நீ என்னை அறியாமல் இருக் கக்கூடும். ஆனால் நான் உன்னைப்பற்றி அனைத்தும் அறிவேன் (தி.பா.139:2) நீ அமர்வதையும் எழுவதையும் நான் அறிந்திருக்கிறேன் (தி.பா.139:3) உன் தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது (மத் 10:29-31). நீ என் உருவிலே படைக்கப்பட்டிருக்கிறாய் (தொ.நூ.1:27) என்னிலே தான் நீ வாழ்கின்றாய், இயங்குகின்றாய், இருக்கின்றாய் (தி.ப. 17:28) நீ என் பிள்ளை (தி.ப 17:28) தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். (எரே 1:4-5) எனது திருவுளத் திட்டத்தின்படி நீ முன் குறிக்கப்பட்டாய் (எபே 1:11-12) நீ பிறந்தது ஒரு தவறல்ல. உன்னுடைய நாட்கள் எல்லாம் எனது நூலில் எழுதப்பட்டுள்ளன. (தி.பா 139:15-16) உனக்குக் குறிப்பிட்ட காலங்களையும் குடியிருக்கும் எல்லைகளயும் வரையறுத்துக் கொடுத்தேன் (தி.ப.17:26) அஞ்சத்தகு, வியத்தகு முறையில் நான் உன்னைப் படைத்தேன் (தி.பா. 139:14). உன் உள் உறுப்புக்களை உண்டாக்கியவர் நாமே (தி.பா.139:13) உன் தாய் வயிற்றிலிருந்து நான் உன்னைப் பிரித்தெடுத்தேன் (தி.பா.71:6)

என்னை அறியாதவர்கள் என்னைத் தவறாகக் காட்டியுள்ளனர். (யோவா 8:41-44) நான் தொலைவிலும் இல்லை. உன்னில் கோபமாயுமில்லை. அன்பாய் இருக்கிறேன் (1 யோவா 4:16) உன் மேல் என் அன்பைப் பொழிய வேண்டும் என்பதே என் ஆவல் (1யோவா 3:1). ஏனென்றால் நீ என் பிள்ளையும் நான் உன் தந்தையுமாய் இருக்கும் ஒரே ஒரு காரணத்தால் (1 யோவா 3:1) உங்கள் மண்ணகத் தந்தையைவிட அதிகமாகக் கொடைகளை வழங்குவேன் (மத் 7:11) ஏனினில். நானே நிறைவுள்ள தந்தையாய் இருக்கிறேன் (மத் 5:48). நீ பெற்றுக்கொள்ளும் நல்ல கொடைகள் அனைத்தும் நிறைவான வரங்கள் எல்லாம் என்னிடமிருந்தே வருகின்றன. (யாக் 1:17) உங்கள் தேவைகளை நிறைவு செய்பவர நாமே (மத் 6.31-33) உங்களுக்காக நான் வகுத்துள்ள திட்டங்கள் வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் அளிக்கின்றன (எரே. 29:11). ஏனென்றால், நான் உன்னை முடிவில்லாது அன்பு செய்கிறேன் (எரே. 31:3).

முழு உள்ளத்தோடும் உன்னை நான் உறுதியாக நிலைநாட்டுவேன் (எரே. 32:41). நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும் மறைபொருட்களையும் உனக்கு நான் காட்டுவேன் (எரே. 33:3). உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் தேடினால், என்னைக் கண்டடைவாய் (இ.ச. 4:29). என்னிலே மகிழ்ச்சி கொள். உன் உள்ளத்துவிருப்பங்களை நான் நிறைவேற்றுவேன் (தி.பா.37:4). ஏனென்றால், என் திருவுளப்படி நீ செயற்படுவதற்கான விருப்பத்தையும் ஆற்றலையும் நானே தருகிறேன். (பிலிப். 2:13). நீ வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவராயிருக்கிறேன். (எபே. 3:20).

உங்களுக்கு ஊக்கமளிப்பவரும் ஆறுதலளிப்பவரும் நானே (2தெச. 2:16-17). நானே இன்னலில் உழலும் உங்களுக்கு ஆறுதல் அளிக்கும் தந்தை (2கொரிந். 1:34). நீ உள்ளம் உடைந்திருக்கும்போது உடனிருப்பவர் (தி.பா. 34:18) ஆயன் தம் மந்தையை தோளில் தூக்கிச் சுமப்பதுபோல் உன்னை நான் என் இதயத்துக்கு அருகில் சுமந்தேன் (எசாயா. 40:11). உன் கண்களிலுள்ள கண்ணீரை நான் துடைப்பேன் (தி.வெ. 21:3-4).

நானே உன் தந்தை. என் மகன் இயேசுவை அன்பு செய்வதுபோல் நான் உன்னையும்அன்புசெய்கிறேன்(யோவா. 17:23). ஏனென்றால், இயேசுவிலே நான் உன்மீது கொண்டுள்ள அன்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது (யோவா. 17:26) அவரே என்னுடைய சாயலின் அச்சுப்பதிவாக விளங்குவார் (எபிரே 1:3) நான் உன் சார்பாக இருப்பவர். உனக்கெதிராக இருப்பவரல்ல என்பதைக் காண்பிக்க வந்தவர் (உரோ. 8:31). உன் குற்றங்களைப் பொருட்படுத்துபவரல்ல என்பதை அறிவிக்க வந்தவர் (2கொரி. 5:18-19). நீ என்னோடு ஒப்புரவாகும் பொருட்டே இயேசு இறந்தார் (2கொரி. 5:1819). அவரது மரணம் தான் நான் உன்மீது கொண்டுள்ள அன்பின் இறுதி எல்லை (யோவா. 4:10). என்பதைக் காட்டுகிறது.

நான் உன் மேல் கொண்டுள்ள அன்புக்காக அனைத்தையும் துறந்தேன் (உரோ. 8:31-32). என் கொடையாகிய இயேசுவை ஏற்றுக் கொண்டால் என்னையே ஏற்றுக் கொள்ளுகின்றாய் (1யோவா. 2:23). என் அன்பிலிருந்து எதுவும் உன்னைப் பிரிக்க முடியாது (உரோ. 8:38-39). எனவே, என் வீட்டுக்கு வா. இதுவரை நீ கண்டிராத பெரிய விருந்தொன்றை ஏற்பாடு செய்வேன். உனக்காக என்றும் காத்திருக்கிறேன் (லூக்.15:11-32).

இப்படிக்கு
உன்னை நேசிக்கும் இறைவன்

**அவமானம்**

தன் குருவிடம் ஒருவர் கேட்டார் 'என்னை பலரும் அவமானப்படுத்துகிறார்கள். நான் என்ன செய்வது?' குரு சொன்னார் 'அவற்றைப் பொருட்படுத்தாதீர்கள்'. 'என்னால் முடியவில்லையே' என்று அவன் கூற, குரு 'அப்படியானால் அவற்றைக் கடந்து செல்லுங்கள்'என்றாராம். அதற்கும்அவன்'குருவேஅதுவும் முடியவில்லை' என்று கூற, குரு 'அவமானங்களை உங்களால் நிராகரிக்க முடியவில்லை, கடக்க முடியவில்லை, கண்டு சிரிக்க முடியவில்லையென்றால் அந்த அவமானங்களுக்கு நீங்கள் தகுதியுடையவர் என்று தான் அர்த்தம்' என்றாராம்.

**வாழ்க்கைத் தத்துவம்:**

நீண்டதூரப் பயணம் ஒன்றிற்குப் புறப்பட்ட இளவரசன் தான் கொண்டு செல்ல இருக்கும் பொருட்களின் பட்டியலை தந்தையிடம் நீட்டியபோது, தந்தை அதை தொட்டுக்கூடப் பார்க்காமல் தன் மகனிடம், 'வெறுக்காத இதயம் – வாடாத புன்னகை – புண்படுத்தாத வார்த்தைகள் இவை மூன்றையும் மறவாமல் எடுத்துச் செல். மனித நேயமே மகத்துவம். இனிய சொற்களே தத்துவம்' என்றாராம்.

## சிந்திக்க சில வரிகள்

➢ இயேசு இறைதந்தையின் சித்தப்படி வாழ்ந்து காட்டினார். கிறிஸ்தவர்களாகிய நாமும் அவருடைய வாழ்வோடு எம்முடைய வாழ்வையும் இரண்டறக் கலக்கின்ற போது தான் எம்முடைய வாழ்வில் ஒரு புதிய மாற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கும்.

➢ இறை அன்பு என்பது இறைவனின் கட்டளைகளுக்கு கீழ்ப்பட்டு நடக்க வேண்டுமென்பதேயாகும். அவரது கட்டளைகளை உதாசீனப்படுத்தி அவரது அன்பைச் சுவைக்க முடியாது.

➢ இவ்வுலகம் புனிதர்களை நினைவுபடுத்தி மதிப்பளித்து வருகின்றது. காரணம் இவ்வுலகப் போக்கு என்பது எல்லாம் வல்லாதிக்கத்தின் தன்மையுடனேயே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. புனிதம் என்பது ஒரு ஆன்மீக வழி. இந்த வழிக்கு உலகம் வரமுடியாது. திருச்சபை உலகிற்கு ஒளி கொடுத்துக் கொண்டுதான் இருக்க முடியும்.

➢ அன்பிய வாழ்வு என்பது அடிமட்ட உள்ளுணர்வுகளில் இருந்து வெளிக்கொணரப்பட வேண்டியதொன்று. பட்டம், பதவி, பணம், பொருள் பண்டங்களின் மதிப்பீடுகள் இவையே. அன்பிய வாழ்வுக்கு இவை தடைக்கற்களாக இருப்பதை நாம் உணர்ந்து கொள்வதில்லை. "பணிவிடை பெறவல்ல பணிவிடை புரியவே வந்தேன்" என்கிறார் இயேசு. இதுவே அன்பியத்தின் அடித்தளமாகும்.

யோ.கலிஸ்ரா
சுன்னாகம்

# முழு மதிக்காக மறைந்த நட்சத்திரம்



சமுதாயமே பதில் செல்....

உ.டிலக்ஷிகா

ஒட்டி உலர்ந்த வயிற்றுடன், குழிவிழுந்த கண்களுடன், கண்ணீருடன் கதை பேசி கரைந்து போன வாழ்க்கையை எண்ணி கஸ்தூரி கண்ணீர் வடித்தாள். இரு குழந்தைகளை கையில் தந்துவிட்டு போராளியாகப் போரில் போராடி காற்றோடு கலந்துவிட்ட தன் கணவனான கண்ணனை நினைக்க கண்ணீர் கரை புரண்டோடியது.

ஆஸ்திக்கு ஒன்று, அழகுக்கு ஒன்றாக ஆணும் பெண்ணுமாக இரு செல்வங்கள், அவளின் இரு கண்கள் ஆதி, மாலினி. இருவரும் கல்வி கற்கிறார்கள். பக்கத்து வீடுகளில் பாத்திரம் தேய்த்தும், அருகிலுள்ள விடுகளில் சமைத்துக் கொடுத்தும் அவள் வாழ்க்கைப் பயணத்தை இழுத்துக்கொண்டு ஓடினாள். கல்விச் லெவு போக ஒருவேளை உணவே அவளால் சமைத்துக்கொடுக்க முடிந்தது.

எத்தனை காலம் தான் அந்த இயந்திரம் ஓடி ஓடி உழைக்கும். அவள் உடல் ஓய்வை நாடியது. உடல் முழுதும் ஒரே வலியாகவும் அடிக்கடி தலை சுற்றுவதுமாக இருந்தாள். இதனால் ஒழுங்காக வேலைக்கு முடியாது. ஒருவேளை உணவையும் சமைக்க முடியாது இருந்தார். அடுப்பம் கரைகள் பூனைகளுக்கு படுக்கையறையானது. ஆதிக்கோ பசியின் புரட்சி ஒருபுறம் இருக்க, அன்னை நிலையைக்காண அச்சமாக இருந்தது. ஓடித்திரியும் தன் அன்னை ஓரத்தில் முனகிக் கொண்டிருப்பதைக் காண உடலில் ஓடும் இரத்தம் உறைந்து விடும்போல் இருந்தது. ஏதோ ஒரு முடிவை மனதில் எடுத்துக் கொண்டு அன்னையின் அருகிலேயே தூங்கிவிட்டான்.

ஆதவனின் அன்புக்கரங்களில் பூமித்தாய் தவழ காலையும் மலர்ந்தது. காலையிலேயே தன் தாயை அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்குச் செல்ல வைத்தியசாலையில் அவளின் பரிசோதனைகள் ஆரம்பமாகியது. மாலைப் பொழுது நிறைவு பெற்றது. அன்னைக்காக அவன் வைத்தியசாலையின் வாயிலிலே காத்திருந்தான்.

இடையில் தங்கைக்கு தன்னிடம் இருந்த சில்லறையை செலவு செய்து பணிஸ் ஒன்றை வாங்கி கொடுத்து விட்டு வந்திருந்தான். வைத்தியர்களைச் சந்தித்தபோது வைத்தியர்கள் கூறிய செய்தி அவன் பிஞ்சு இதயத்தை முள்ளால் கிழித்தது போல இருந்தது.

தாயின் மார்பில் ஒரு கட்டி வளர்வதாகவும் அதை உடனடியாகஅப்புறப்படுத்தவேண்டும்என்றும்இல்லாதுவிடின் உயிருக்கு ஆபத்து என்றும் ஆனால் அதற்கு அதிக செலவாகும் என்றும் வைத்தியர் கூறினார்.

உறைந்து போன இதயத்தை உயிர்ப்பிக்க யாருமின்றி தனிமரமாக நின்றான். எப்படியாவது தன் அன்னையைகாப்பாற்றவேண்டும்என்றுஉறுதிபூண்டான் வேலை தேடி கடைகள் ஏறினான். பலரது காலில் அழுது புரண்டான். ஆனால் அவனது இயலாமையை யாரும் புரிந்து கொள்ளவில்லை. எல்லா தெய்வத்திடமும் தன் தெய்வத்தைக் காப்பாற்றும் படி நேர்த்தி வைத்தான். நேர் வழியில் சென்றாலும் நையப்புடைக்கிறார்களே என்று உள்ளம் குமுறினான். தன் தாயைக் காப்பாற்ற வேண்டும் என்பதே அவன் முழு உடலின் இதயத்துடிப்பாய் இருந்தது - தீய வழியை தேர்வு செய்தான். நகைகள் திருடினாள், போதைப்பொருட்கள் விற்றான்.தீயோருடன் சேர்ந்தான்.

பணம் சேர்ந்தது. அன்னையை வைத்திய சாலையில் சேர்த்து பணத்தை கட்டினான். அன்றிரவு.... வீதியில் செல்லும் போது பொலிசாரால் கைது செய்யப்பட்டான். அவனுக்காக வாதாட யாருமின்றி குற்றவாளியாக கூண்டில் நின்றான். விதியும் விளையாடத் தொடங்கியது. தூக்கிலிடுவதே அவனுக்கு வழங்கப்பட்ட தண்டனை. அவன் தூக்கிலிடப்படும் திகதியும், அவன் அன்னைக்கு சத்திர சிகிச்சை நடைபெறும் திகதியும் ஒன்றாக இருந்தது.

அவனதுகடைசிஆசையாகதன்தாயைமுத்தமிட்டு விட்டு தன் உயிரை இறைவனின் கரத்தில் ஒப்படைத்தான். வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்ட தாய்க்கு சத்திர சிகிச்சை நடைபெற்றது. ஆனால் அது வெற்றி பெறவில்லை. **கருவறையில் சுமந்த உன்னை எப்படியடா கல்லறையில் தவிக்க விடுவேன்** என்று அவள் ஆன்மா கூறியது. தங்கை மாலினியின் வாழ்க்கைக்கு விடிவு ஏதோ...?

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி. செ. அன்புராசா அமதி**

*(ஜெயா, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: ஞானசார தேரர் அவர்கள், 'முஸ்லிம்களும் தமிழர்களும் கள்ளத்தோணியில் வந்தவர்கள்!' என கூறிவருகின்றாரே! இவருக்கு வரலாறு தெரியாதா?**

ப: ஜெயா, இவருடைய கருத்துக்குத் தரன் எவனோ ஒருவன் நெற்றியடி அடித்திருந்தான் பின்வருமாறு: "ஓ ஒங்கட விஜயனும் அவர்ட பொண்டாட்டியும் கட்டார் எயார்வேஸ்லதானே வந்தாங்க!" என்று!

*(பற்றிக், யாழ்ப்பாணம்)*

**கே: 'சிங்களவர்கள்தான் வந்தேறு குடிகள்! இதனை ஆதாரங்களுடன் நிருபிப்பேன்!' என கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அண்மையில் சவால் விடுத்திருக்கின்றார். 'முஸ்லிம்களும் தமிழர்களும் கள்ளத்தோணியில் வந்தவர்கள்!' என்று சொல்லுகின்ற சூழலில் இவர் ஒரு வித்தியாசமான நல்ல நடுநிலைமையான மனிதனாகத் தென்படுகின்றாரே! இவர் இப்படிச் சொல்லக் காரணமென்ன?**

ப: பற்றிக், வேறென்ன? கொஞ்சமாவது படிச்ச மனிசனாவும், வரலாறு தெரிந்தவராகவும், நடுநிலை உடையவராகவும் இருப்பதுதான் காரணம்!

*(மேரி, கிளிநொச்சி)*

**கே: என்ன மழையையா இது? அடிச்சா கொட்டோ கொட்டிண்டு கொட்டுது! வெள்ளம் போடுது! அல்லது குடிநீருக்கே படுகிறபாடு பெரும்பாடு! என்ன இது?**

ப: மேரி, தமிழர்களுடைய அதாவது நம்முடைய வாழும் உரிமைக்கான போராட்டம் போலத்தான் மழைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது! அதனால் தான். ஒருவன் அதனின் நிலைப்பாட்டினை எழுதியிருந்தான்: "மழை வெள்ளத்தைத் திட்டாதீர்கள்! திருடப்பட்ட தன் ஏரிகளையும் குளங்களையும் பரிதா-பமாக அது தேடி அலைகிறது. தன் இருப்பிடத்தை ஆக்கிரமித்துக் கட்டடங்கள் கட்டியதால் சாலையில் இறங்கி மறியல் செய்கிறது..." என்று! புரிகி-றதா இப்போது? வீதிகளை அமைக்கிற அதிகாரிகள் வீதிகளுக்கு நிகராக வடிகால்களையும் அமைக்கவேண்டும் என்று அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தும் அவற்றை அசட்டை செய்து அல்லது பொருட்படுத்தாது அல்லது வழமை போன்று வீதி காணாது எனக்கூறி வடிகால்களை அமைக்காது விட்டுவிடுகிற நிலை ஒருபுறமிருக்க, மறுபுறம் நம்முடைய வீட்டுக்கு முன்னால் உள்ள வடிகாலை அல்லது வாய்க்காலை துப்பரவுசெய்து வைத்திருக்கிறோமா? இல்லையே! பெய்கிற மழைநீர் வெளியேறுவதற்கான வடிகால்கள் முடக்கப்பட்டிருந்தால் நீர் எங்கே வடிந்தோட முடியும்? வடிந்தோடுவதற்குப் பதிலாக தான் நினைத்தபடி வலம்வரும்! அது பெரும் சிரமங்களையும் சிக்கல்களையும்உண்டு பண்ணும்! எனவே, ஆகக்குறைந்தது, நம்முடைய வீட்டையும் வளவையும் சுற்றியுள்ள வடிகால்களையும் எப்போதும் துப்பரவாக வைத்திருப்பது வெள்ளம் வீட்டிற்குள் வராமல் வெளியேற உதவியாய் அமையும்.

*(மதி, யாழ்ப்பாணம்)*

**கே: கடந்த வாரம், 'இவ்வாண்டு உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திய விடயம் எது? காரணம்?' என்றொரு கேள்வியைக் கேட்டிருந்தேன். அதற்குப் பதிலாக, "இலங்கையின் 2019 ஜனாதிபதித் தேர்தல் முடிவு! தெற்கும் மேற்கும் சிங்களவர்களின் தாயகம் என்பதுபோலவும் வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பதுபோலவும் நிருபிக்கப்பட்டிருக்கிறது!" எனப் பதிலளித்திருந்தீர்கள். எக்காரணத்திற்காக நீங்கள் இப்படிக் கூறலாம்?**

ப: மதி, தென்பகுதியில் (மேற்கு உட்பட) பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்கள் தங்களின் ஒட்டுமொத்த எண்ணக் கருவாகிய, அதாவது, 'பௌத்த சிங்கள' கருத்தியலுக்கு வாக்களித்திருக்கிறார்கள். வடகிழக்கில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்கள் பௌத்த சிங்கள கருத்தியலுக்கு முற்றும் எதிராக வாக்களித்திருக்கிறார்கள்! இதிலிருந்து உங்களுக்கு என்ன புரிகிறது? உங்களுக்கு என்ன புரிகிறதோ எனக்குத் தெரியாது! ஆனால், நம் நாடு இரண்டு துண்டுகளாகக் கிடக்கிறது என்பது துலாம்பரமாக எனக்குத் தெரிகிறது!

## கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!

*(செல்வன், யாழ்ப்பாணம்)*

**கே: வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆயர்கள் புதிய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவைச் 2019 மார்கழியில் சந்தித்துப் பேசியிருப்பதாகத் தெரிகின்றது. நம் ஆயர்கள் தற்கால பல பிரச்சினைகளைப் பற்றியேபேசியிருப்பதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன. அப்படியானால் அடிப்படைப் பிரச்சினையான அரசியல் தீர்வு குறித்து ஒன்றும் பேசவில்லையா?**

ப: செல்வன், முதலில் அரசியல் தீர்வு குறித்து ஆயர்கள் பேசினார்களா பேசவில்லையா என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க நான் அவர்களுடன் செல்லவில்லை! நிற்க, நம்முடைய் ஆயர்கள் அன்றாட பிரச்சினைகள் மட்டுமல்லாது நமது அடிப்படைப் பிரச்சினையான அரசியல் தீர்வு குறித்தும் பேசியிருக்கவேண்டும்! பேசியிருக்கலாம்! ஆனால், பொதுவாக ஆட்சியாளர்களுடைய சூட்சுமத்தினையும் கொஞ்சம் புரிந்துகொள்வது புத்திசாலித்தனமானது அது எப்படிப்பட்டதென்றால், அன்றாடபிரச்சினைகளைத் தீர்க்காமல் ஓரளவிற்கு அப்படியே வைத்துக்கொண்டிருந்தால்தான் மக்கள் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி (உதாரணமாக அரசியல் தீர்வு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விடயம் போன்றவை) அவ்வளவாக அலட்டிக் கொள்ள மாட்டார்கள்! அதனால்தான், தீர்க்கக்கூடிய சாதாரண பிரச்சினைகளே தீர்வில்லாமல் கிடக்கின்றன! அப்படி அப்பிரச்சினைகள் இல்லாது போனால் புத்தம் புதிய பிரச்சினைகளை உருவாக்கிவிடுவார்கள்(உதாரணம் தற்போது பூதாகரமாக மாறியிருக்கும் மண் அல்லது மணல் அகழ்வுப்பிரச்சினை)! காரணம், இப்படி உருவாக்கப்படும் அன்றாட பிரச்சினைகளில் மக்கள் அமிழ்ந்துபோய் விடுவார்கள். இவ்வாறு அன்றாட பிரச்சினைகளில் அமிழ்ந்துபோவதால் அடிப்படைப் பிரச்சினைகளை மக்கள் அடிக்கடி நினைக்காது, படிப்படியாக அடியோடு மறந்துவிடுவார்கள் என்பதால் சாதாரண அன்றாட பிரச்சினைகளை ஒருபோதும் ஒரேயடியாக தீர்க்கமுடியும் என்றாலும் தீர்க்க மாட்டார்கள்! புரிகிறதா செல்வன் ஆட்சியாளர்களில் சூட்சுமம்!

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.**

## 2020ம் ஆண்டு உலக அமைதி நாள்

## திருத்தந்தையின் செய்தி

### "அமைதி நம்பிக்கையின் ஒரு பயணமாக"



2020 ஆம் ஆண்டின் முதல் நாள் அன்று சிறப்பிக்கப்படும் உலக அமைதி நாளுக்காக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது வெளியிட்டுள்ள செய்தி.

**◆ அமைதி, பிரச்சினை மற்றும் தடைகளுக்கு முன்னர் நம்பிக்கையின் ஒரு பயணம்**

அமைதிக்காக நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை எத்தனை தடைகளையும் பிரச்சினைகளையும் சந்தித்தாலும் முன்னோக்கிச் செல்ல நம்மை உந்தித் தள்ளுகிறது. சமுதாயத்தில் உள்ள பன்முகத் தன்மையை ஏற்றுக்கொள்ள இயலாமை என்ற குறைபாடு நம்முள் மோதல்களையும், போர்களையும் உருவாக்குகின்றன. மனித சமுதாயம் தன் நினைவிலும், உடலிலும் போர்களின் காயங்களையும் வடுக்களையும் தாங்கி வாழ்கிறது. மனிதர்கள் நடுவே நிலையற்ற தன்மையும், அச்சமும் உருவாகும் வேளை அவற்றுக்குத் தீர்வாக மக்களிடையே உறவையும், உரையாடலையும் வளர்ப்பதற்குப் பதில் பகைமை என்ற நஞ்சை இவ்வுலகம் விதைக்கிறது.

**◆ நினைவு ஒருங்கிணைப்பு மற்றும் உடன் பிறந்த நிலை ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட செவிமடுத்தலின் பயணமே அமைதி.**

1945 ஆம் ஆண்டு வரலாற்றில் என்ன நடந்தது என்பதை மனித குலத்தின் மனச்சாட்சிக்கு தொடர்ந்து நினைவுறுத்தும் வண்ணம் அணுக் குண்டுத் தாக்குதலிலிருந்து தப்பித்து ஹிரோசிமா, நாகசாகி நகரங்களில் வாழ்ந்து வருவோர் நமது நினைவுகளைத் தொடர்ந்தும் மீட்டு வருகின்றனர். வரலாற்று நினைவுகளே நம்பிக்கை என்ற தொடுவானத்தில் தோன்றும் ஒளிக்கீற்றுகள். இவ்வுலகிற்கு இன்று வெறுமையான வார்த்தைகளும், வாக்குறுதிகளும் தேவையில்லை மாறாக சமாதானம் செய்வோரின் சாட்சியமே தேவையாகும். அமைதி வழிமுறை என்பது பொறுமையாக ஒருங்கிணைந்து உண்மையையும், நீதியையும் தேடுவதற்கு மேற்கொள்ளப்படும் பயணம். போர்களில் இறந்தோரின் நினைவுக்கு நாம் செய்யும் மரியாதை ஆகும்.

**◆ உடன்பிறந்த ஒருமைப்பாட்டில் உருவாகும் ஒப்புரவின் பயணம் - அமைதி**

நாம் ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகும் பொருட்டு கிறிஸ்து தம் உயிரை அளித்தார் (உரோமையர் 5:6-11). திருவிவிலியம் குறிப்பாக இறைவாக்கினர்களின் கூற்றுக்கள் நாம் அனைவரும் இறைவனின் மக்கள் என்பதையும் எனவே ஒருவரை ஒருவர் மதிப்புடன் கண்ணோக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. நீதியின் வழியாக ஒப்புரவைக் கொணர்வதில் திருஅவை மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது.

**◆ சுற்றுச்சூழலையொட்டிய மனமாற்றத்தின் பயணம் - அமைதி**

பிறர் மீது நாம் காட்டும் பகைமை நமது பொதுவான இல்லமான பூமியை மதிக்காமல் சுற்றுச்சூழலை சீரழிக்கும் நமது செயற்பாடுகளிலும் வெளியாகிறது. இவ்வுலகை பண்படுத்தவும், பாதுகாக்கவும் அண்டவராகிய கடவுள் மனிதனை இங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார். (தொ.நூ. 2:15) நமது வருங்கால தலைமுறையினருக்கு வளமானதொரு பூமியை விட்டுச் செல்வது நமது கடமையாகும். சுற்றுச்சூழலையொட்டிய மனமாற்றம் என்பது வாழ்வை புதியதொரு கண்ணோட்டத்துடன் நோக்கவும், இறைவன் நமக்கு தாராளமாக வழங்கியுள்ள வளங்களைப் பகிரவும் நம்மை அழைக்கிறது.

**◆ நாம் நம்பும் அனைத்தையும் பெறுகிறோம்**

நாம் நம்பிக்கை கொள்ளும் அனைத்தையும் பெறுகிறோம் என்பது சிலுவையின் புனித யோவான் கூறிய வார்த்தையாகும். அமைதி உருவாகும் என்ற நம்பிக்கை நமக்கு இல்லையெனில் அமைதி தோன்ற முடியாது. அமைதி உருவாகும் என்று நம்பிக்கை கொள்வதும், நம்மைப்போலவே மற்றவர்களுக்கும் அமைதி தேவை என்று எண்ணுவதும் அமைதியைக் கொணரும் நம்பிக்கையின் பயணமாகும். அமைதியின் இறைவன் நம்மை ஆசீர்வதித்து நம் உதவிக்கு வருவாராக! அன்னை மரியா நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் நம்மோடு துணை வருவாராக!

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## விடைபெறும் 2019



சமூகத் தொடர்பு ஆணையத்திற்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டல் நிகழ்வு



புனர்நிர்மாணம் செய்யப்பட்ட யாழ் ஆயர் இல்ல சிற்றாலயம் ஆசீர்வதித்துத் திறந்து வைப்பு



கத்தோலிக்க சட்டத்தரணிகள் சங்கம் அங்குரார்ப்பணம்



அகவொளி நிறுவனத்தின் உள ஆற்றுப் படுத்தல் டிப்ளோமா பட்டமளிப்பு விழா




அமெரிக்கத் தூதுவர், பிரித்தானிய தூவர் யாழ் ஆயரைச் சந்தித்தவேளை...

## நெஞ்சம் மறப்பதில்லை










மனிதம் மரணித்த உயிர்த்த ஞாயிறு



திருமறைக்கலாமன்றத்தின் திருப்பாடுகளின் ஆற்றுகை...



ஈழப்பெருந்துயரின் 10 ஆம் ஆண்டு நினைவு



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தனிநாயகம் அடிகள் நினைவரங்கம்



அல்லைப்பிட்டியில் மொன்போர்ட் சர்வதேச பாடசாலைக்கு அடிக்கல்



முல்லை மறைக்கோட்டத்தில் அன்புக் கன்னியர் சபை அருட்சகோதரிகளின் இல்லம்



கிளிநொச்சியில் சதாசகாய அன்னை ஆலயம் யாழ் ஆயரால் திறந்து வைப்பு




இளையோர் ஆண்டின் சிறப்பு நிகழ்வு



பற்றீசியன் நிறுவனம் டொன் பொஸ்கோ சபைக் குருக்களினால் பொறுப்பேற்பு



புனித மடுத்தீனார் குருமடம் முழுமையாகப் புனரமைப்பு



புனித யோசவ் வாஸ் இறையியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழா

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்


கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள அப்போஸ்தலிக்க
கார்மேல் துறவற சபைச் சகோதரிகளால் நடத்தப்படும்

Carmel English Academy

Certificate Course

English & Computer Learning

2020 ஜனவரி 10 முதல்

Personality Development and Joyful Living

AD 88

4 Months Full Time 8.30 a.m - 4.00 p.m
க.பொ.த (சா/த) முடித்த மாணவர்களுக்கு - Jan 10 - May 10
க.பொ.த (உ/த) முடித்த மாணவர்களுக்கு - Sep 15 - Dec 30
விடுதி வசதி தேவைப்படும் மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்படும்.

Reginal Centre : Gampaha
Coordinator Rev.Sr.M.Nimalka A.C
Lisieux Convent
Gampaha

Director : Provincial Superior
Carmel Convent,
88, Ananda Rajakuruna Mawatha
Colombo 10

English
Grammar
Listening
Reading
Writing
Speaking
Skills
Computer
MS Office

Reginal Centre : Jaffna
Coordinator Rev.Sr.Therese Ranee A.C
Contact : 077 714 1159
Superior
Convent of Our Lady of Lanka
Atchuvely,
(Near St.Theresa's Girls College)
Contact No :
0771735962 / 0212055826

அண்மையில் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) முடித்த மாணவ மாணவிகளே உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு உங்களின் ஆங்கில அறிவை வளர்க்க, ஆளுமை விருத்தி, தொழில் வாய்ப்பு தேர்ச்சிகளை அடைய இன்றே நாடுங்கள்.

இன்று முதல் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்


## தீர்ப்பு வழங்கும்...

(3ம் பக்கத் தொடர்ச்சி...)

எமது துன்ப அனுபவம் எம்மை உண்மையாகவே புடமிடுகிறது என்றால் நாம் மற்றவர் துன்ப துயரில் அவர்களைப் புரிந்து கொண்டு அவர்களைத் தேடிச் சென்று உதவும் மனநிலையைப் பெற்றிருப்போம். இத்தகையோரையே நாம் " காயமுற்ற மருத்துவர்" (Wounded Healer) என்கிறோம். இயேசு தாமே சிலுவையை ஏற்றே எம்மை மீட்டார் என்பதை நாம் மனதில் இருத்த வேண்டும்.

**தீர்ப்பு வழங்கும் லாசர்கள் :**

மத்தேயு நற்செய்தி 25ம் அதிகாரம் எமது மீட்பு வரலாறான இறுதி ஆய்வில் எழுப்பப்படும் வினாக்களை தெளிவாக முன் வைக்கிறது.

"பசியாய் இருந்தேன் உணவு கொடுத்தாயா? தாகமாய் இருந்தேன் குடிக்கக் கொடுத்தாயா? அந்நியனாய் இருந்தேன் வரவேற்றாயா? ஆடையின்றி இருந்தேன் உடுத்தினாயா? நோயுற்றும் சிறையிலும் இருந்தேன் பார்க்க வந்தாயா?" இந்த வினாக்கள் அனைத்துமே துயருறுவோர் சம்பந்தமான வினாக்களே. எமது அரவணைப்பைப் பெற்ற துயருறுவோரே எமது மீட்புக்கான நற்சான்றுப் பத்திரங்கள். மாறாக நாம் கடந்துபோன லாசர்களே. எமது இறுதி ஆய்வில் தீர்ப்பின் செங்கோலை கையில் எடுத்த மன்னவர்கள். எமது கண்முன் கிடக்கும் லாசர்களை கடந்து போகாதிருப்போமாக. பாராமுகம் என்னும் பாவத்திலிருந்து விடுபடுவோம். துயருறுவோராக வெளிப்படும் இயேசுவுக்கு துணையாய் இருந்து எமது மீட்பை சுவீகரித்துக் கொள்வோம்.

## மனித நேயத்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றும் நம் மத்தியில் இதே நிலைதான் காணப்படுகின்றது. எங்கு பார்த்தாலும் மோதல்களும், சமுதாய சீரழிவுகளும், போட்டி பொறாமைகளும், அரசியல் தந்திரோபாயங்களும், சமூக ஏற்றத்தாழ்வுகளும், மனிதனையே மனிதன் வதைக்கும் அபாயங்களும், படுகொலைகளும் நிகழ்ந்த வண்ண்ம் உள்ளது. பகுத்தறிவு ஜீவன்களென சொல்லிக்கொள்ளும் மனிதர்களாகிய எமது மனங்களில் பசுமைக்குப் பதில் வரட்சி நிலவுகின்றது. மலர்களுக்குப் பதில் முட்புதர்கள் மண்டிக் கிடக்கிறது பயிர்களுக்குப் பதில் களைகள் விளைந்து கிடக்கிறது.

இத்தகைய மனித நேயத்தின் மறைவு மனிதகுல வளர்ச்சிக்கு தடையாக அமைந்துள்ளது. இத்தகைய சூழலிலே தான் மீண்டுமொரு கிறிஸ்மஸ் விழாவை எதிர்நோக்குகின்றோம்.

கிறிஸ்துவின் வருகையின் நோக்கத்தை அறியாது வெறும் சடங்கு சம்பிரதாயமாக கிறிஸ்மஸ் விழாவை அனுசரிப்பதில் பயனேதுமில்லை. இயேசு பிறப்பின் உண்மையைத் தேட வேண்டும். அன்று கிறிஸ்து பிறந்த போது ஏரோதன் தேடினான். இயேசுவை கண்டடையவில்லை. கீழ்த் திசை ஞானிகள் தேடினார்கள் - இயேசுவை கண்டடைந்தார்கள். ஏரோதன் தேடல் மனித நேயத்துக்குப் புறம்பான ஆக்கிரமிப்பு, ஆதிக்கம், ஆணவம், கொலைவெறித்தனம் நிறைந்த தேடலாக இருந்தது. ஆனால் கீழ்த்திசை ஞானிகளின் தேடல் உண்மையின் தேடலாக, மனித நேயத்தின் தேடலாக, விடியலின் தேடலாக அமைந்தது. எனவே தான் அவர்களுக்கு வால்வெள்ளி சரியான பாதையைக் காட்ட அவர்கள் இயேசுவை கண்டடைந்தார்கள். இயேசுவுக்கு ஞானிகள் கொடுத்த காணிக்கைப் பொருட்களில் இயேசுவை அரசராக பொன்னும், இறைவனாக தூபமும், தியாகத்தின் திருவுருவமாக வெள்ளைப்போளமும் அடையாளம் காட்டியது. உண்மையின் தேடல் இவ்வாறாகத்தான் இருக்கும். நாமும்ஏரோதன் தேடலாக இயேசுவைத் தேடாமல் ஞானிகளின் தேடலாக இயேசுவைத் தேடிக் கண்டடைவோம்.

யாழ் மறைமாவட்டம் மலரவிருக்கும் புத்தாண்டை "துயருறுவோர் ஆண்டாக" பிரகடனம் செய்யும் இவ்வேளையில் இம்மண்ணில் மனித நேயம் மலர, மனித மாண்பு தழைக்க நாம் உழைப்பதுடன் துயருறுவோரை எம் செபங்களிலும், கரங்களிலும் தாங்கி கிறிஸ்து பிறப்பை அர்த்தமுள்ள விழாவாக்குவோம். அனைவருக்கும் எனது இறை ஆசீருடன் கூடிய கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

## இது ஓர் ஒளிவிழா...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வெறுமையாக்கும் படிமுறையில் நோவுண்டு அந்த நோவுதான் எமது சிலுவை. இயேசுவின் கூற்றில் "என்பின் வருபவர்" என்ற சொற்றொடர் உண்டு. இந்த 'வருபவர்' அனைத்து மக்களையும் உள்வாங்குகின்றது. இயேசு அனைத்து மக்களுக்கும் உரியவர் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல.

**ஆழ்மனத்தியானம்**

எங்களுள் ஒளி நோக்கிப் பயணிப்பதாக இருந்தால் ஆழ்மனத்தியானம் அத்தியாவசியம். இதற்கு மௌனம் இன்றியமையாதது. இந்த மௌனம் என்ற சொல் சமஸ்கிருத "மௌன" (MAVNA) என்ற சொல்லில் இருந்து வந்திருக்க வேண்டும். மௌன என்ற சொல் சத்தம் இல்லாத அன்றேல் புறத்தில் ஒலி இல்லாத ஒரு நிலைமட்டுமல்ல. இச்சொல் அதற்கப்பால் சென்று மனதை வெறுமையாக்கி ஆழ்மௌனத்தில் இருக்கும் பொழுது என்னுள் இருக்கும் ஒளி பிரகாசிக்கும். மற்றவர்கள் இந்த ஒளியைப் பார்க்கமாட்டார்கள். ஆனால், என்னில் எனது உறவில் ஒரு மாற்றத்தைக் காண்பார்கள். இந்த அகப்பயணத்தை ஞாபகப்படுத்தவே ஒளிவிழா வழிவகுக்க வேண்டும்.

**நெற்றிக்கண்**

நெற்றிக்கண் என்ற சொற்றொடரை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். இது ஒரு உருவகம் ஆயினும் அந்த உருவகத்தின் பின்னால் ஒரு பேருண்மை உண்டு. ஆழ்மன தியானத்தில் வளர்வோர் ஞானம் பெறுகிறார்கள். இந்த ஞானம் ஒரு கொடை. பாடசாலைப் படிப்பாலோ, பல்கலைக்கழக படிப்பாலோ இது வருவதில்லை. அது அறிவு. இது ஞானம். இந்த ஞானத்தில் தோன்றுவது ஒளி. மனதை வெறுமையாக்கி அந்த மனதையும் மேவிச்செல்லும்போது ஓர்மை உணர்வை அனுபவிக்கின்றோம். இந்த அனுபவத்திற்கு அனைத்து மக்களும் அகத்தே அழைக்கப்படுகின்றார்கள். இதுவன்றோ இயேசுவின் கனவு. 'எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக' (யோவான் 17:21)

## இளவாலை மறைக்கோட்ட வருடாந்த ஒன்றுகூடல்

இளவாலை மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகத்தின் வருடாந்த கூட்டமும் ஒன்று கூடல் நிகழ்வும் 15.12.2019 தியான இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு கழகத்தின் தலைவர் திரு கீதபொன்கலன் தலைமையில் நடைபெற்றது. கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு பாலகன் இயேசு வுக்கு அருட்பணி x.p. றெக்னோ அடிகளாரால் ஒளியேற்றினார்.

மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ம.யேசுரட்ணம் அடிகளார் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். அவர் தனது உரையில் தமது மறைக்கோட்டத்திலுள்ள ஒவ்வொரு பங்குகளையும் தரிசித்து கருத்தமர்வுகளையும் கூட்டங்களையும் நடாத்தியுள்ளோம் எனவும் அன்பியங்கள் சில பங்குகளிர் உருவாக்கப்பட்டு நற்கருணைப் பணியாளர்கள் இருவரை இளவாலைப் பங்கில் உருவாக்கியுள்ளோம் எனவும் தெரிவித்தார்.


### 8ம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 12 07 1942
விண்ணில் 22 12 2011

அமரர்
வைத்திய கலாநிதி மரிசலீன்பிள்ளை மரியதாசன் (JP)
(பேரின்பம்)
சுகாதார வைத்திய அதிகாரி (M.O.H)
யாழ் மாநகர சபை (2001 - 2011)

"நீங்களிருக்கும் போதெல்லாம் கொண்டாடினோம்
குதுகலித்தோம் இப்போது நீங்கள் எம்மோடு
இல்லையெனினும் எங்கள் உள்ளங்களில் நீங்கள்
என்றென்றும் நிலையாகவே தங்கிவிட்டீரகள்..."

ஆவே மரியா
72 கோயில் வீதி,
சுண்டுக்குளி.

பேரன் - அருண்
நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

AD 87

### 31ம் நாள் நினைவலைகள்



மண்ணில் 17 07 2010
விண்ணில் 19 11 2019

அமரர்
சி.பென்சித் றஜாந்தி

ஆண்டவரே, உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்
நான் ஒரு போதும் வெட்கமடைய விடாதேயும்,
உமது நீதிக் கேற்பஎன்னை விடுவித்தருளும்.
[திருப்பாடல் 31:1]

இரக்கம் நிறைந்த இயேசுவே
உம்மிடம் அழைத்துக் கொண்ட
இச் சிறுமலராகிய பென்சித் என்றும்
உம் மகளுக்கு நித்திய சாந்தி
அளித்தருளும்.

100, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

என்றும் உன்
நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

AD 85

### 3ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 11 04 1963
இறப்பு 15 12 2016

அமரர்
அலெக்சாண்டர் யூலியன் (குயின்ரன்)
(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)

என் அன்பான அப்பா!
ஆலமரங்கள் சரிந்து வளரும் முன்னே
சூரியன் மறைந்து மாலைப் பொழுது வரும் முன்னே
அலைகள் ஓய்ந்தது கரையை தொடும் முன்னே
எம் எல்லோரையும் விட்டு எங்கு சென்றீர்கள் அப்பா!
ஆயிரம் தடவை தண்டித்தாலும் அத்தனை தடவைகளும்
எனக்காய் வலி தாங்கிடும் அன்பின் தடியாக நின்றாயே
இன்று அந்த தண்டிப்பும் அன்பும் எங்கே அப்பா!
நீங்கள் என்மீது அளவு கடந்த அன்பு வைத்தீர்களே அப்பா
இன்று உம் அன்பிற்காகவும் அரவணைப்புக்காகவும் ஏங்குகிறேன்
உம் மகளாய்! காலங்கள் கடந்து சென்றாலும்
உம் அன்பும் உம் நினைவுகளும் எப்போதும் எம்முடன் இருக்கும்
உம் நித்திய பேரின்ப வாழ்விற்காக
இறைவனை மன்றாடுகின்றோம்.

29, சென் செபஸ்ரியன் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்,
மனைவி, மகள்

AD 86

# துயருறுவோர்க்கு துணை நிற்கவே பாலகன் இயேசு அவதரித்தார்

**குருமுதல்வரின் நத்தார் செய்தி**



ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க, உண்மை உடைத் தோருக்கு ஆறுதல் அளிக்க, சிறைப்பட்டோர் விடுதலைபெற, குருடர் பார்வை பெற என் தந்தை என்னை அனுப்பியுள்ளார் என்று இயேசு தான் இவ்வுலகில் பிறந்ததன் நோக்கத்தை தெளிவாக எடுத்துரைத்தார். அப்பணியையே நிறைவேற்றினார்.

எமது மறைமாவட்டத்தில் வருகிற வருடம் நாம் அனுசரிக்க விருக்கின்ற துயருறுவோர் ஆண்டில் எமது செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பதை பாலன் இயேசு மண்ணில் அவதரித்ததன் நோக்கம் எமக்கு உணர்த்தி நிற்கிறது.

## குருநகர்ப் பங்கில் புதிய குருமனை



யாழ் குருநகர் பங்கில் புதிய பங்குக் குருமனை 08.12.2019 அன்று யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப் பட்டது. இந்நிகழ்வில் யாழ் மறைமாவட் டக் குருமுதல்வர், யாழ் மாநகர சபை முதல்வர் திரு.இ.ஆனோல்ட், குருக்கள், துறவிகள், பங்குமக்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இக்குருமனைக்கான அடிக்கல் சென்ற ஆண்டு நாட்டப்பட்ட நிலையில் பங்குத்தந்தை அருட்பணி.C.ஜஸ்ரின் அடிகளாரின் அயராத உழைப்பினால் மிகச் சிறந்த முறையில் அழகு பெற வடிவமைக்கப்பட்டுள்ளது.

## குருத்துவ வாழ்வில் 56 ஆண்டுகள்



மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் குருத்துவ அபிஷேக நாள் (21.12.2019)

குருத்துவ வாழ்வதனில்
அருள்நிறை இறைபணியில்
ஐம்பத்தாறு வருடங்கள்
அதி உன்னத நிலை அன்றோ
ஆண்டகையே! உந்தனுக்கு
ஆண்டவர் ஆசி வேண்டி
வாழ்த்துரைத்து மகிழ்கின்றோம்
கோதுமை மணியென பலனீந்து
நற்கனிகளென நலனீந்து
யாழ். திரு அவைக்கு தனையீந்த
திருவருட்செல்வமே வாழ்க! வாழ்க!!

# இலங்கை துறவற உயர் தலைவர்கள் பேரவையின் புதிய நிர்வாகக்குழு



இலங்கை துறவற உயர் தலைவர்கள் பேரவையின் புதிய நிர்வாகக்குழுவில் நற்கருணைநாதர் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்பணி. டிலான் பெர்னாண்டோ SSS பேரவையின் தலைவராகவும் , புனித. டோமினிக் கன்னியர்கள் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி சிறிமா ஒப்பநாயக்க OP உப தலைவியாகவும், டிலாசால் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்சகோதரர் கிறிஸ்டி குருஸ் FSC பொருளாளராகவும், திருக்குடும்ப கன்னியர் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி தியோபின் HF, செப மாலைதாசர் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்பணி. பிரான்சிஸ் ஜெயசீலன் CR, திருச்சிலுவைக்கன்னியர் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி றொபினா பவுலின் HC ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## மல்வம் பங்கின் சகல புனிதர்களின் இராக்கினி பிரசீடிய விழா



உடுவில் மல்வம் பங்கு சகல புனிதர்களின் இராக்கினி பிரசீடியத்தின் ஒன்பதாவது பிரசீடிய விழா பங்குத்தந்தையும் அதன் ஆன்மீக இயக்குநருமான அருட்பணி அன்ரன் புனிதகுமார் அடிகளாரின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நிகழ்வுகள் அதன் தலைவி மாலதி மோகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆர்க் மடம் பாடசாலை அதிபர் அருட்சகோதரி சாந்தினி சாந்தலிங்கம்(தி.கு) பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

## யாழ் மறைமாவட்டத்தின் புதிய நற்கருணைப் பணியாளர்கள்



யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பங்குகளில் இருந்து பயிற்சி பெற்ற பத்து பொதுநிலை நற்கருணைப் பணியாளர்களை நியமிக்கும் திருப்பலி கடந்த 12.11.2019 அன்று யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக் கப்பட்டது.

திருவாளர்கள் செல்லையா பற்றிக் ஜெயராஜ்(இளவாலை), செபஸ்தி றொபின்சன் (இளவாலை), சிவராஜா கிருபறூபன்(மணியம்தோட்டம்), செபஸ்ரி பீற்றர்(O.L.R. யாழ்.), அவுலின் மரியதாசன் (O.L.R. யாழ்.), பங்கிராஸ் பத்மராசா(O.L.R. யாழ்.), செபஸ்ரியான் அன்ரனி டெனிஸ் (புங்குடுதீவு), பத்திநாதன் வசந் அன்றூஸ்(சக்கோட்டை) திருமதிகள் றணசிங்க மேரி ஜெலோனா(சக்கோட்டை), விக்னேஸ்வரன் ஆரோக்கிய மரி(மிருசுவில்) ஆகியோரே நற்கருணைப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### வாசக நெஞ்சங்களை வாழ்த்துகின்றோம்




மனித நேயம்
மண்ணில் மலர
அவதரித்த மன்னர் இயேசு
துயருறும் எம் உறவுகளின்
துயர் துடைக்க
அழைக்கின்றார்
குரல் கேட்டு
கரம் கொடுப்போம்
வரம் பெறுவோம்
கிறிஸ்மஸ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்

பாதுகாவலன் ஆசிரியர்
அருட்பணி.
எஸ்.எயின்சிலி றொஷான்

### பேராலயத்தில் கிறிஸ்து பிறப்பு மற்றும் புது வருடத் திருப்பலிகள்

**கிறிஸ்து பிறப்பு**

| | |
|---|---|
| நள்ளிரவுத் திருப்பலி (ஆயர் தலைமையில்) | : 11.45 |
| முதலாம் திருப்பலி | : காலை 5.30 |
| இரண்டாம் திருப்பலி | : காலை 7.00 |
| நன்றி வழிபாடு 31.12.2019 | : மாலை 5.00 |

**புதுவருடம்**

| | |
|---|---|
| நள்ளிரவுத் திருப்பலி | : 11.45 |
| முதலாம் திருப்பலி | : காலை 5.30 |
| இரண்டாம் திருப்பலி (ஆயர் தலைமையில்) | : காலை 7.00 |


# புனித வளன்

## கத்தோலிக்க அச்சகம்

டிஜிற்றல் அச்சுத்தரத்தின் முன்னோடிகள்



- புத்தகங்கள்
- நினைவுமலர்கள்
- போஸ்ரர்கள்
- அழைப்பிதழ்கள்
- பற்றுச் சீட்டுக்கள்
- கலண்டர்கள்
- ஸ்ரிக்கர்கள்
- அலுவலக அச்சகத் தேவைகள்
- பைண்டிங் வேலைகள்

தரமான வேலை
துரிதமான சேவை
நியாய விலை

இல.360,பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 021 222 2378



# நெவாட் பௌண்டேஷன் லிமிட்டெட்

## மீன்வலை உருவாக்கல் தொழிற்சாலை



வடக்கு கிழக்கு மக்களின் கடல் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் உங்கள் தேவைக்கேற்ப வலைகளை உற்பத்தி செய்து வழங்கும் நிறுவனம்.







- ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரத்தில் முன்னணிவகிக்கும் யாணைக் (Yarn) கொண்டு, வாடிக்கையாளரின் தேவைக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவும் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- நன்னீர் மீன் பிடிப்பதற்கான வலைகளையும் உங்கள் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம்.
- 3 இழை - 60 இழை வரையிலான வலைகளை உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உடனடியாக உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- விவசாய தேவைகளுக்கான வலைகளும் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- உங்களுக்கு தேவையான நைலோன் நூல்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (3 இழை – 60 இழை வரை 100 கிராமாக பெற்றுக் கொள்ளலாம்)

எம் அன்பார்ந்த வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எம் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

No.647, Beach Road, Jaffna, Sri Lanka E-mail: nefadfishnets@yahoo.com
Tel: +(94) 21 222 8919 Fax: +(94) 21 222 4781


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360. பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2019 ஆண்டு மார்கழி மாதம் 25 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.